1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA

Telephone:
No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 21-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆனிமாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## அர்ச். தமதிரித்துவம்

"ஒரே கடவுள் மூன்றுஆட்களாய் இருக்கிறார்" என்னும் தமதிரித்துவத்தின் பரமஇரகசியமே நமதுதிருமறையின் அஸ்திவாரக்கல். மற்றஎல்லாத் தேவஇரகசியங்களும் இந்தப்பரம இரகசியத்தின் ஊற்றினின்றே புறப்படுகின்றன. ஆதலால் நாம் சொல்லும் பிரார்த்தனைகளிலே பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மூன்றுஆட்களையும் தனித்தனியே மன்றாடியபின் மூன்று் தேவஆட்களும் ஒரே கடவுளானபடியால் அர்ச். தமதிரித்துவ சர்வேசுரனின் தயவை மன்றாடுகிறோம்.

இவ்வுலகில் நாம் கடவுள்காட்டியுள்ள வழியில் பிரமாணிக்கமாய் நடப்போமானால், ஒருநாள் வரும்; அந்நாளில் நமது விசுவாசத்திரை நீங்க, கடவுளை நேருக்குநேராகப் பார்க்கும் ஒப்பில்லாப்பாக்கியத்தை அடைவோம். அந்நாளில் அர்ச். தமதிரித்துவ இரகசியத்தின் உண்மையைக் கண்டுணர்ந்து அளவிலா ஆனந்தம் அடைவோம். பிதாவாகிய சர்வேசுரன் எவ்விதம் தாமாக இருக்கிறார் என்றும், அதேபிதா தம்மை நித்தியமாய் அறிவதால் அவருடைய மனவார்த்தையாகச் சுதன் எவ்விதம் பிறக்கிறார் என்றும், பிதாச் சுதனுக்குள்ள பரஸ்பர சிநேகத்தால் மூன்றாவது ஆளாகிய இஸ்பிரீத்துசாந்து எவ்விதம் புறப்படுகிறார் என்றும் கண்டு களிப்படைவோம். இத்தோடு, இதன்வழியாகப் பிறக்கும் புத்திக்குப்புலனாகாத இன்னும்பல சத்தியங்களையும் பகல் வெளிச்சம்போல் கண்டு உணர்வதிலேயே நமது மோட்ச இன்பம் அடங்கியிருக்கிறது.

இச்சத்தியம் மனிதபுத்திக்கு எட்டாதது என்பதற்கு ஹிப்போ பட்டணத்து மேற்றிராணியாரான அர்ச். அகுஸ்தீனாருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சிறுசம்பவம் தக்கசான்று. திருச்சபையின் வேதசாஸ்திரவல்லுநரில் தலைசிறந்தவர் என்று இன்றும் புகழப்படுபவர் அர்ச். அகுஸ்தீனார். இவர் ஒருநாள் கடலோரத்தில் உலாவிக்கொண்டு அர்ச். தமதிரித்துவத்தின் பரம இரகசியத்தைக் கண்டுபிடிக்கும்படி ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சிறுவனொருவன் கடற்கரைமணலில் ஒரு சிறுகுழி தோண்டி, ஒரு சங்கினால் கடல்நீரை அள்ளி அள்ளி அக்குழியில் ஊற்றுகிறதைக்கண்டு வியப்படைந்தார். உடனே சிறுவனிடம்சென்று அவனைப் பார்த்து: "மகனே, என்ன செய்கிறாய்?" என்று அன்புடன்கேட்டார். "கடல்நீரை எல்லாம் இந்தச்சிறுகுழியில் ஊற்றமுயல்கிறேன்" என்று சிறுவன் பதிலுரைத்தான். அதற்கு மேற்றிராணியார் "என்ன! இந்தச் சிறுகுழியில் கடல்நீரெல்லாம் அடங்கமாட்டாதென்று உனக்குத் தெரியாதா?" என்று சொல்ல, பையன் பிரத்தியுத்தாரமாக: "ஆண்டவரே, நீங்கள் பரிசுத்த தமதிரித்துவத்தின் பரம இரகசியத்தைக் கண்டுபிடிக்கிறதற்குமுன், நான் இந்தக்குழியில் கடல்நீரையெல்லாம் ஊற்றிவிடுவேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துபோனான். சிருஷ்டிகளால் இப்பரம இரகசியத்தைக் கண்டுபிடிக்க முடியாதென்பதைக் காண்பிக்கும்படியே, சிறுபையனாகத்தோன்றிய சம்மனசானவர் இவ்விதம் செய்தாரென்று நாம் அறிகிறோம். ஆ! பரலோகத்தின் இரகசியங்களை முற்றும் ஆராய்ந்து அறிய முயலும் அற்ப மனிதனுக்கு இது எத்துணை அழகான பாடம்!

நம்மைப் படைத்தவர் பிதா; நாம் இவ்வுலகில் இருப்பதற்கும் அவரே காரணம்; நம்மை ஒவ்வொரு நிமிடமும் காத்துவருபவரும் அவரே. சுதன் நமக்காக மனிதனாய்ப்பிறந்து சிலுவையில் மரித்து நம்மைப் பாவத்தினின்றும், பிசாசின் அடிமைத்தனத்தினின்றும் மீட்டுத் தேவசுபாவத்திலும் நமக்கு ஓர் விதத்தில் பங்குபெற்றுத்தந்தார். இஸ்பிரீத்துசாந்துவோ ஞானஸ்நானத்தால் நம்மைக்கழுவி, நமது இருதயங்களில் தேவ சிநேகம் என்னும் விதையை விதைத்துக் கடவுளுக்கும் நமக்குமிடையே ஓர் அழியாப்பந்தனத்தை ஏற்படுத்துகிறார். தேவஇஷ்டப்பிரசாதத்தை நமது ஆத்துமத்தில் மேன்மேலும் பொழிந்து நம்மைச் சர்வேசுரனுடைய சுவீகாரப் பிள்ளைகளாகவும், யேசுநாதரோடுகூட உடன்பங்காளிகளாகவும் ஆக்கி நம்மை மகிமைப்படுத்துகிறார். இவ்விதம் தமதிரித்துவத்தின் ஒவ்வொரு தேவஆளும் நமக்கு அளிக்கும் விசேஷகொடைகளைத் தக்கவிதமாய் மதித்து, சிறப்புவாய்ந்த நமது அந்தஸ்துக்கு ஏற்றவிதமாக நடக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இவ்வளவு உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டநாம், கடவுளுக்கு ஏற்காத பொருட்களையும், செயல்களையும் நமது நிலைக்குத் தகுதியற்றவைஎனக் கருதவேண்டும். 'பரலோகபிதாவின் பிரியமக்கள்', 'தேவகுமாரரின் சகோதரர்கள்', 'இஸ்பிரீத்துசாந்துஉறையும் நடமாடும் கோவில்கள்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்கள்நாம். கிறீஸ்தவர்கள் கடவுளால்தெரிந்தெடுக்கப்பட்ட குலத்தைச் சேர்ந்தவர்கள். தங்கள் குலப் பெருமைக்குப் பங்கம் ஏற்படாவண்ணம் நடக்கவேண்டியது அக்குலத்தைச் சேர்ந்தோரின் கடமை என்க.

## தியாகவீரர் தமியன்சுவாமிகள்

M. S. ஜேசுதாஸ் தங்கசாமி,
B. A., B. T.

தம்மை மறந்து, அன்பு நிறைந்து, சேவைசெய்தலே தம்பணியெனக் கொண்டு தியாக வாழ்வு நடத்தியபலரை நம் திருமறை கொண்டிருக்கின்றது. தன்னலங்கருதாது அல்லலுற்றோருக்காய்த் தம்மை முழுவதும் அர்ப்பணித்த வண. தமியான் சுவாமிகள் உண்மையில் ஓர்தியாகவீரர். 'தியாகி', 'தியாகி' என அறைகூவிக் 'கியாதியை' நாடும் நயவஞ்சகக் கூட்டத்தைச் சார்ந்தவரல்ல அவர். செய்தற்கரியவற்றைச்செய்தார். உயிரினும் மேலாய்க் கடமையைக் கொண்டார். முடிவில் அவர் பெற்றது குன்றாப்புகழ்.

ஐரோப்பாவின் இதயமெனத் திகழும் பெல்ஜியதேச டிரமெலு எனுங் கிராமத்தில் ஓர் கத்தோலிக்க பெற்றோரின் ஆறாவது அருஞ்செல்வனாய் 1840-ம் வருடம் தை மாதம் 3-ந் திகதி தமியான் பிறந்தார். அவரின் ஞானஸ்நானப் பெயர் யோசெப் டெவெஸ்ற்றர். பக்தியுள்ள பெற்றோரைப்பெற்ற யோசெப் பாலிய முதலே தியாகம், ஈகை, அன்பு என்ற குணங்களைக் கொண்டிருந்தனர். கிருஷிகரான தன் தாய்தந்தையருக்கு உறுதுணையாயிருந்தார். திறமையுடன் பெரிய ஆட்டுமந்தையை ஓட்டிச்செல்வார். ஆதலின் அவர் "குட்டி இடையன்" என அழைக்கப்பட்டார்.

உலகில் உயர்வடைய வேண்டுமென விரும்பிய அவர் பெற்றோர் அவரைக் கல்லூரிப் படிப்பிற்காகப் பரீஸ்நகருக்கு அனுப்பினர். ஆனால், துறவறத்தை மேற்கொள்ள விரும்பிய தங்கள் மகனின் எண்ணத்தை மாற்றப் பெற்றோர் துணியவில்லை. அவரின் அண்ணன் ஒருவர் துறவியாயிருந்தார். ஒரு சகோதரி கன்னியாஸ்திரியாயிருந்தனள். தங்கள் கடைசி மைந்தனையும் கர்த்தருக்குக் காணிக்கையளித்தனர். அவர் தம் சமயப்பற்றுத்தான் என்னே?

அவரும் பரீசிலுள்ள "பிக்பஸ்" துறவறசபையில் சேர்ந்து பசிபிக் சமுத்திரத்திலுள்ள சாண்ட்விச் தீவுகளில் சமயத்தொண்டாற்றத் தயாராயினர். ஆகவே, பிரியாவிடை பெறுதற்காய்த் தம் இல்லமேகினர். அதன்பின் அவர் தம் பெற்றோரைச் சந்தித்தவரல்ல. பிரயாணத்திற்குமுன் தமது புகைப்படமொன்றைத் தம் பெற்றோருக்கு அனுப்பினார். 1863-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 1-ந் திகதியன்று அவர் பிரமர் ஹாவன் எனும் ஜேர்மன் துறைமுகத்தில் கப்பலேறினார். சாண்ட்விச்தீவுகளின் பிரதான பட்டணமாகிய ஹனலூலுவை 1864-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-ந் திகதியில் அடைந்தார்.

யோசெப் டெவெஸ்ற்றர்என்ற இளைஞர் தமியான் என்றபெயர் தாங்கி ஹனலூலுநகரில் குருப்பட்டம் பெற்றார். அந்நகர்மேற்றிராணியாரான மெகுரற்று ஆண்டகை அவருக்குக் குருப்பட்டமளித்தார். 6,406 சதுரமைல் பரப்பளவுள்ள சாண்ட்விச் தீவுகளில் ஒன்றான ஹாவாய் தீவில் தமியான் சுவாமியார் திருப்பணிபுரியலாயினர். எவ்விதமோ ஹாவாய்தீவில் குஷ்டரோகம் அதிகமாகப் பரவினது. இதைத் தடுக்க அரசாங்க அதிகாரிகள் குஷ்டரோகிகளை மொலோக்காய் தீவிற்கு நாடு கடத்தினர்கள்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் சின்னம்

அன்று எங்கள் பங்குக்குருவாய்ப் புதிதாகவந்திருந்த சுவாமியாரை நான் முதன் முறையாகச் சந்திக்கச்சென்றேன். அவர்என்னை அன்பாகவரவேற்ருர். ஒருஆசனத்தில் அமரவைத்தார். அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த சிறுதுவேளையில் எனதுபார்வை அவர் மேசைமீதிருந்த சுரூபத்தில் சென்றது. ஐந்துஅங்குல உயரமுள்ள அந்தத் திவ்வியபாலனின் திருச் சுரூபத்தைக் கூர்ந்துபார்த்ததும் துணுக்குற்றேன். 25 வருடங்களுக்குமுன் நிகழ்ந்த ஓர்சம்பவம் அப்போது என் மனத்திரைமுன் காட்சியளித்தது. அதைப்பற்றிச் சுவாமியாரிடம் எவ்விதம் விசாரிப்பதென்று எண்ணமிடுகையில், அவராகவேதொடங்கினுர்.

"அங்கே எதைக் கவனிக்கிறீர்" என்ருர். அவரிடமிருந்தே சகலத்தையும் அறியவேண்டுமென ஆவல்கொண்டு, "சுவாமி! இந்தப்பழைய கால மாதிரியான சுரூபத்தை ஏன் வைத்திருக்கிறீர்கள்? இப்பொழுது நல்லபுதுமாதிரியான சுரூபங்கள் எங்கும் கிடைக்குமே" என்றேன்.

"இது என்னுடைய ஓர்ஞாபகசின்னம்."

"அதைப்பற்றிநான் அறியக்கூடாதா சுவாமி?"

"அதைப்பற்றி எவருமே இதுவரை என்னைக் கேட்டதில்லை. அது ஒரு பெருங்கதை. என்ருலும் சொல்கிறேன்."

காட்டூர்என்பது ஒருசிறுகிராமம். தற்போது அங்கே பத்துப்பன்னிரண்டு கிறீஸ்தவகுடும்பங்கள் இருக்கின்றன. 25வருடங்களுக்குமுன் அது கிறீஸ்தவ மணமே வீசப்பெருத ஓர்கிராமமாய் இருந்தது.

அரியநாயகம் ஓர்சுத்தசைவர். நல்லஇருதயம் உடையவர். கடவுள் பற்றுஉள்ளவர். அவர்மனைவி அருமைநாயகியோ பத்தாவுக்கேற்ற ஓர் பதிவிரதை. புருஷன்மனம் புண்படப்பேசி அறியாதவள். கணவன்வாக்கைக் கடவுள்வாக்கெனக் கருதுபவள். பெயரளவில் எவ்வளவு ஒற்றுமைஇருந்ததோ அவ்வளவுஒற்றுமையாக வாழ்க்கையை நடத்தினுர்கள் அரியமும், அருமையும்.

இருவரும் மணஞ்செய்து ஆறு வருடங்களாயின. அதற்குள் மூன்று குழந்தைகள் பிறந்து மூன்றையுமே பறிகொடுத்துவிட்டார்கள். ஒவ்வோர் குழந்தையும் ஒருவயது பூர்த்தியானதும் ஓர்மாதிரியான விஷசுரங்கண்டு மடிந்துபோயின. அதனுல் பெற்ருேர் ஆருத்துயர்கொண்டனர்.

அவர்களின் மனவேதனையை மாற்றும் ஓர்மருந்தாக வந்துசேர்ந்தார் மரியநாயகம். அரியத்தின்வீட்டிற்கு அருகாமையில் ஓர்அரசினர்பாடசாலை. அப்பாடசாலைக்குத் தலைமைஆசிரியராக இருந்தவர்தான் மரியநாயகம். அவர் ஓர்உத்தம கத்தோலிக்கர். தமதுஇன்பமான பேச்சுவன்மையால் எவரையும் தம்பால்கவரும் சக்திவாய்ந்தவர். அவர் பிறவூர்வாசியாக இருந்தமையாலே ஒருவேலைகாரப் பையனுடன்மாத்திரம் காட்டூரில்தங்கியிருந்தார். விடுமுறைகாலங்களில் தமது சொந்தஊருக்குப் போய்விடுவார். மனஅமைதியற்ற அரியநாயகத்துக்கு ஆறுதல்அளிக்க மரியநாயகத்தை ஆண்டவர்அனுப்பினுர்போலும்.

பச்சைப்பாலகரைப் பறிகொடுத்த பெற்ருேருடன் அவருக்குப் பழக்கம் உண்டாயிற்று. ஓய்வு நேரங்களில் அவர்களுடனேயே அவர்சம்பாஷித்துக்கொண்டிருப்பார். அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் கூறுவார். கிறீஸ்துநாதரின் போதனைகளையும், சாதனைகளையும் விளக்கிக்காட்டுவார். சில அர்ச்சியசிஷ்டர்களைப்பற்றிய சரித்திரப்புத்தகங்களை அவர்களுக்கு வாசிக்கக்கொடுப்பார்.

அவ்வாருக அவர் ஒருநாள் தமது அறையில்வைத்துத் தினமும்பூசித்துவந்த திவ்வியபாலனின் திருச்சுரூபம் ஒன்றை எடுத்துப்போய் அரியநாயகத்திடம் கொடுத்தார். அப்போது நான் சுவாமியாரின் மேசைமேலிருந்த சுரூபத்தைப்பார்த்தேன். "ஆமாம் அதுதான் இந்தச்சுரூபம்" என்ருர்சுவாமியார். அதைஅரியநாயகத்திடம் அவர் கொடுத்துத் திவ்வியபாலனை நம்பிக்கையுடனே மன்ருடிவந்தால் நீங்கள்ஆசித்துக்கேட்பதை அவர் தந்தருள்வார் என்ருர். ஆசிரியரின் நன்முன்மாதிரிகையிலும், சிறந்தபோதனையிலும் வசப்பட்டுக் கடைசியாக அவர்கள் சத்தியவேதத்தில்சேரவும் சம்மதித்துவிட்டார்கள்.

* * *

விடுமுறைகாலம், ஆசிரியரும் தமது சொந்த ஊருக்குப்போகாது காட்டூரிலேயே தங்கிவிட்டார். தமது மனைவி மக்களைமறந்து ஒருகுடும்பத்தை மனந்திருப்புவதாகிய மாபெரும்பணியில் ஈடுபட்டார். காட்டூரிலிருந்து மேட்டூர் 20 மைல்தூரம். அங்குதான் குருவானவர் இருக்கிருர். நத்தார்த் திருநாளுக்கு நாலுநாட்கள்முன்னதாகவே அவர்கள் மூவரும் மேட்டூர்போய்ச் சேர்ந்தனர். அரியநாயகமும், அருமைநாயகியும் அங்கேகுருவானவரிடம் ஞானஸ்நானம்பெற்று நத்தார்ச்சாமப்பூசையில் முதல்நன்மையும் பெற்றுக்கொண்டனர். அவர்கள் பூசைவேளை மிகவும் உருக்கமாக மெய்மறந்து செபித்தமையாலே பூசைமுடிந்து சனங்கள் வெளியேறியதைமுதலாய் அவர்கள்கவனிக்கவில்லை.

தாங்கள் பூசிக்கும்தெய்வம் தங்களுக்கு விடைகொடுக்கவேண்டும்

— ஆசிரியர், B. சிங்கராசா —

என்பது அவர்களின்எண்ணம். பழைய காலத்தில் சிலஅஞ்ஞானிகளிடம் இவ்விதகொள்கை இருந்துவந்தது.

"ஆம்சுவாமி, அப்படிப்பட்டவர்கள் தற்காலத்திலும்உண்டு. கனவிலோ, நினைவிலோ தெய்வம்வந்து தாங்கள் கேட்பதற்கு விடையளிக்கிறதாம்" என்றேன்.

"ஆம் மாஸ்றர், நினைவில்இருப்பது கனவிலும்வரும்." அதைச்சிலர் விசுவசிக்கிருர்கள். ஆனுல், எங்கள்திருவேதத்தில் காட்சிகொடுத்தலும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலும்உண்டு.

அரியமும்அருமையும் தங்களுக்குப் புத்திரபாக்கியம்கிடைக்க அருள்புரியவேண்டுமென்று திவ்வியபாலனை வேண்டிக்கொண்டே அயர்ந்துநித்திரையானுர்கள். நித்திரையிலும் திவ்வியபாலனுடன் சம்பாஷித்தார்கள்.

விடியற்காலை வீடு செல்வதற்காக ஆசிரியர் மரியநாயகம் அவர்களை அழைக்கக் கோவிலுக்குள் சென்ருர். அங்கே அரியநாயகம் நித்திரையில் கைகூப்பியவாறு ஏதோமுணுமுணுத்துக்கொண்டிருந்தார். அவர்மனைவி அருமைநாயகி, அன்றுசாமப்பூசையில் திவ்வியபாலன் பேரில் பாடிய தாலாட்டுப்பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள்.

ஆசிரியரின் அதட்டல்குரல்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தனர்இருவரும். திவ்வியபாலனைவணங்கி விடைபெற்றனர். தங்களுக்குத் திவ்வியபாலன் காட்சியளித்தார்என்றும், தங்களுக்குப் புத்திர பாக்கியத்தைஅருளச் சித்தங்கொண்டிருக்கிருர் என்றும் ஆசிரியரிடம் அவர்கள்கூறித் தங்கள்சந்தோஷத்தையும், நம்பிக்கையையும் தெரிவித்தனர்.

அவர்களுடையநம்பிக்கை வீண்போகவில்லை. அந்தமாதத்திலே தானே அருமைநாயகியும் கர்ப்பவதியானுள். அவர்கள்எதிர்பார்த்தபடியே

(தொடரும்)

# சுதேச வர்த்தமானம்

## வணக்கமாச முடிவுவிழா

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே வணக்கமாச முடிவுவிழா சென்ற 1-ந்திகதி ஞாயிறுவாரம் பத்தியருட்சியாகக் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 7 மணிக்கு விக்கார்ஜெனறலாகிய மிக வண. எச். லெக்குத்தூர்சுவாமியவர்களால் பாடற்பூசைநிறைவேறியது. சாயந்தரம் வண. பி. நிக்கலஸ்சுவாமியவர்கள் வேஸ்பர்பாடி மாதாவின் அடைக்கலத்தை நம்பிக்கையோடு தேடவேண்டிய அவசியத்தைப்பற்றி அரியதோர் பிரசங்கஞ்செய்தனர். அதன்மேல் தேவதாயாரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம்நடந்து திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் விழா பூர்த்தியாயிற்று. வழமைபோலப் பாப்பரசரின் நைற்பட்டவர்த்தனரான சவிரிமுத்துமுதலியாரின் சுற்றத்தவர்களதுஉபயத்திலே திரு. விக்ரர் செருபிம்அவர்கள் முன்னின்று விழாவைச் சிறப்பாக நடத்தலாயினர்.

## யூபிலிவிழா உபசரணை

சம்பத்திரிசியார்கல்லூரியின் முன்னுள்அதிபரான வண. சாள்ஸ் எஸ். மத்தியூஸ்சுவாமியவர்களின் குருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடுமுகமாகக் கல்லூரிமைதானத்திலே நாளை நின்றுவரும் 7-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு ஆரம்பமாகி நடந்தேறவிருக்கும் தோட்டஉபசரணைக்குச் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர்சுவாமிகளும், விழாக்கமிற்றியாரும் பழையமாணவர்களுக்கும், யூபிலிநாயகரின் அபிமானிகளுக்கும் அழைப்புப்பத்திரம் விடுத்திருக்கிருர்களென அறிகின்ருேம்.

## வித்தியா பண்டிதபட்டம்

வண. பி. ஈ. அல்பிறெட், பி. டி. சுவாமியவர்கள் ஒற்ருவா சர்வகலாசாலையின் எம். ஏ. எனும் வித்தியா பண்டிதபரீட்சையில் அரங்கேறியிருக்கிருரென அறிந்து சந்தோஷமானேம்.

## பிரதமர் பிரதமரே

பொதுத்தேர்தலிலே ஐக்கியதேசியக்கட்சி அரைவாசிக்குமேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெற்றிருப்பதாலே அக்கட்சியின்தலைவரான பிரதமர் டட்லி சேனநாயகஅவர்கள் தமதுபதவியை இராசிநாமாச்செய்ய வேண்டிய அவசியமேஏற்படாது பின்னரும்தொடர்ந்து தம்பதவியை வகித்திருக்கின்ருர். அதனுல் அரசாங்கத்தை அமைக்கும்படியாகக் கவர்னர்-ஜெனறல் அவரை அழைக்கவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

## செங்கல், ஓட்டுத் தொழிற்சாலை

அனுராசபுரத்திலிருந்து 30 மைல் தூரத்திலுள்ள கெக்கிராவையிலே செங்கற்களும், ஓடுகளும் உற்பத்திசெய்யும் பெரியதொழிற்சாலைஒன்றை அமைப்பதற்கான ஓர்திட்டத்தை அரசினர்வகுத்திருக்கின்றனர். இந்தத் தொழிற்சாலை வேலைசெய்யத் தொடங்குமிடத்து மாதம்ஒன்றுக்கு இரண்டரைலட்சம் செங்கற்களும், ஓடுகளும் உற்பத்திசெய்புமென மதிப்பிடப்படுகிறது. செங்கற்கள், ஓடுகள் முதலாம் கட்டுவேலைச்சாமான்கள் அருந்தலாய் இருப்பதும், அவற்றின் விலை அதிகரித்திருப்பதும், வடமத்தியமாகாணத்திலே அரசாங்க கட்டடவேலைத்திட்டங்களையும், பிரத்தியேக கட்டடவேலைத்திட்டங்களையும் பூர்த்திசெய்துகொள்ள முடியாதிருப்பதுமே புதியதொழிற்சாலையை அமைப்பதற்கான முக்கியகாரணமாகும். இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான யந்திரசாதனங்களை அமைப்பதற்கான ஒப்பந்தகாரரை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசினர் கண்டடையவிருக்கின்றனர். இன்னும் ஓர்குடிசைக்கைத்தொழிலாகச் செங்கல், ஓடுகள் உற்பத்திசெய்வதைச் சனங்களிடையே ஊக்கப்படுத்திவிடுதற்கான திட்டம்ஒன்றையும் அரசாங்கம் செய்திருக்கின்றது.

## கந்தலாமாக் குளம்

தம்பலை, அனுராசபுரப்பிரிவுகளிலே ஓர்பெரும்பகுதிக்கும், மின்னேரிவரையிற்தானும் மேலதிகநீர்ப்பாய்ச்சல் வசதிகள் அளிக்கக்கூடிய மற்றுமோர் பிரதம நீர்ப்பாசனதிட்டமானது அரசாங்கத்தாலே தொடக்கப்பட்டிருக்கிறது. அதாவது நூற்றுண்டுக்கணக்காகக் கைவிடப்பட்டிருந்ததும், தம்பலையிலிருந்து மூன்றுமைல்தூரத்தில் உள்ளதுமான கந்தலாமாஎனும் புராதனகுளத்தைத் திருத்துவதாலேயே இத்திட்டம் பூர்த்திசெய்யப்படவிருக்கிறது. இதனைத் திருத்துவதற்கென ஏற்படவிருக்கும் செலவுமதிப்பு 60லட்சம்ரூபா. இதுதிருத்தப்படுமிடத்துப் பதினுயிரம்ஏக்கர் நெற்காணியும், மேட்டுக்காணியும் நீர்ப்பாய்ச்சல்வசதிக்குள்ளாகும். இன்னும் மாத்தளைப் பிரிவிலே தெரிந்தெடுக்கப்படும் காணியற்ற 800 குடும்பங்களும் அங்கு கொண்டுபோய்க் குடியேற்றப்படவிருக்கின்றன. வடமத்தியமாகாணத்திலே சென்றவருடத்தில் 104 கிராமக்குளங்கள் அரசினரால் திருத்தப்பட்டிருக்கின்றன. இவ்வருடத்திலே மேலும் 63 கிராமக்குளங்களைத் திருத்தும்வேலைகள் தொடக்கப்பட்டிருக்கின்றன.

## நீர்நிலைய மீன்வளர்ப்பு

ஆறு, ஏரி, குளம்முதலிய உள்நாட்டு நீர்நிலையங்களிலே மீன்வளர்ப்பதைப் பெருக்குங்கருத்துடன் அரசாங்க கடற்தொழிற்பகுதி இற்றைக்கு ஓர் ஆண்டின்முன் பிறநாடுகளிலிருந்து தருவித்துவிட்ட மீன்வகைகள் எதிர்பார்த்ததிலும்அதிகமாகப் பெருகியிருக்கின்றன. அதனுல் இனிமேல் வளர்ப்பதற்கென்று பிறநாடுகளிலிருந்து இவ்வகைமீன்களை மேலும் இறக்குமதி செய்யவேண்டியஅவசியம் இல்லாமற்போய்விட்டது. உள்நாட்டுநீர்நிலையங்களில் மீன்கள்வளர்க்க விரும்புவாருக்கு வேண்டியமீன்களைக் கொடுக்கக்கூடியநிலையில் கடற்தொழிற்பகுதி தற்போது இருந்துவருவதாகத் தெரியவருகிறது.

## வாழ்க்கைச்செலவுப் புள்ளி

இலங்கையிலே சென்றவைகாசி மாசத்தில் வாழ்க்கைச்செலவு மேலும் நான்குபுள்ளிகளால் குறைந்து 276 ஆகியிருக்கிறது. இவ்வருடத்தில் இத்தொகைதான் அதிகம்குறைந்ததாகும். அதனுல் நிகழும்ஆனிமாசத்தில் அரசினர்உதவும் படிச்செலவில் நான்கு லட்சம்ரூபா மிச்சம்ஏற்படும். 100 ரூபாவும், அதற்குமேற்படவும் சம்பளம் பெறுகிறவர்களுக்குக் கொடுபடவிருக்கும் படிச்செலவு 89 ரூபா 70 சதம். 280 புள்ளிகளாய்இருந்தபோது சென்றமாதம் கொடுபட்ட படிச்செலவு 92 ரூபாவாகும்.

## மழித்துக்கொண்டார்கள்

முந்தியபாராளுமன்றத்திலே மாத்தளைப்பிரதிநிதியாய் இருந்துவந்த திரு. நாணயகாரஅவர்கள் இந்தத்தேர்தலிலே தோற்கடிக்கப்பெற்றுத் தமது பதவியை இழந்துபோயினர். இவரை ஆதரித்துநின்ற வாக்காளரிற்சிலர் அவர் தோல்வியடைய மாட்டாரென்றும், அல்லவென்று தோல்வியடைவாராயின் தங்கள்தலைகளை ஒருமயிர்தானுமில்லாது மழித்துப்போடுகிறதென்றும் வாக்களித்திருந்தனர். ஆனுல், அவர் தோல்வியுற்றமையாலே சொன்னவாக்குப்படி தங்களுடைய தலைகளை மழித்துவிடலாயினர். ஆனுல், அவரதுசின்னமாகிய வீட்டைப்போலத் தலையிலேகொஞ்சம் மயிர்விட்டுக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரும் பிள்ளைகளும்

போர்த்துக்கால்தேச பாத்திமாபதியிலே மூன்று இடைப்பிள்ளைகளுக்கும் தேவதாயார் முதற்காட்சி அளித்த 35-வது வருட நிறைவுதினமாகிய சென்ற வைகாசிமாதம் 13-ந்திகதி செவ்வாயன்று பாப்பரசரின் சிற்றாலயத்திலே ஒரு கூட்டம்பிள்ளைகள் அவருடன் ஒன்றுசேர்ந்து செபமாலை செபித்தார்கள். அப்போது இத்தாலிமுழுவதிலுமுள்ள மக்கள் வானொலிமூலம் பரிசுத்தபிதாவும், பிள்ளைகளும் செபமாலை செபிப்பதைக் கேட்டுத் தாங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள்.

## மேற்றிராணிமாரின் எச்சரிக்கை

நகரசபைத் தேர்தல்கள் நடைபெறவிருப்பதை முன்னிட்டு மத்திய இத்தாலியைச்சேர்ந்த கம்பானியாவின் மேற்றிராணிமார்கள் விடுத்த ஓர் விஞ்ஞாபனத்திலே "சாவானபாவம் கட்டிக்கொள்ள ஏதுவாகும்" என்பதாலே கத்தோலிக்கர் 'வோட்' அளிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்களென்று அவர்களை எச்சரித்திருக்கின்றார்கள். இன்னும் அவர்க்ள் கம்யூனிஸ்தர்களுக்கு 'வோட்' அளிப்பதை விலக்குகின்ற பரிசுத்தகந்தோரின் சட்டத்தையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தியிருக்கின்றார்கள். பொதுமக்களுக்கும், தனிப்பட்டபேர்களுக்கும் சமய நீதியும், கத்தோலிக்கநீதியும் வழங்குவதாக உத்தரவாதம் அளிக்கின்ற அபேட்சகர்களுக்கு மாத்திரம் அவர்கள் 'வோட்' கொடுக்கவேண்டுமென்றும் அறிவித்திருக்கின்றார்கள். (இந்தத்தேர்தல் ஏலவேமுடிந்துவிட்டது.)

## கருதினலும் தாயாரும்

சிறைவாசஞ்செய்துவருகின்ற ஹங்கேரியநாட்டின் சிரேஷ்ட அதிமேற்றிராணியாரான கருதினல் மின்ட் சென்ரி ஆண்டவர் 80 வயசுடைய தமதுதாயாரைத் திரும்பவும்காண அனுமதிக்கப்பெற்றிருக்கின்றார். மேற்கு ஹங்கேரியிலுள்ள தனது கிராமத்திலிருந்து ஆகாயவிமானத்திலும், பின்னர் காரிலும் அவர் தாயார் வாக் எனுமிடத்துக்குக் கொண்டுபோகப்பெற்று அங்குள்ள சிறைச்சாலையில் இருந்துவருகின்ற மகனை கருதினலுடன் சம்பாஷிக்க விடப்பெற்றனர். அவ்வேளை நான்கு காவலாளர்கள் சமுகமாயிருந்தார்கள். கருதினல் ஆண்டவர் சுகவிருத்தியடைந்தவராய்க் காணப்பட்டாரென்றும், "விசுவாச ஊக்கமும், ஆழ்ந்த கிறீஸ்தவ மனேதிடமும்" அளிக்கும் மொழிகளைத் தமது தாயாரிடம் அவர் கூறினரென்றும் வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

## "காலகதியடைந்த" விமானி

கனடாதேசரோயல்விமானப் படையிலே முன்னர் ஓர் அதிகாரியாய் இருந்தவரும், சென்ற மகாயுத்தத்திலே இறந்துபோனரென நம்பப்பட்டுக் காணமற்போனவர்களின் இடாப்பிலே பெயர் பதியப்பெற்றவருமான தோமஸ் பறெல்அவர்கள் ஒற்றுவாநகரிலே சமீபத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். வண. பறெல் சுவாமியார் 1944-ம் ஆண்டு ஜேர்மனிக்குமேலாகப் பறந்து போகையில் சுட்டுவிழுத்தப்பட்டு, ஸராலாக் லுவ்ற் எனுமிடத்திலே ஓர் வருடகாலம் யுத்தகைதியாகச் சிறைவைக்கப்பட்டிருந்தார்.

## கனடாதேசமும் கத்தோலிக்கரும்

சென்றவருடம் எடுகக்கப்பட்ட புள்ளிவிபரப்படி, கனடாவிலே தற்போது 60,69,496 கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். அதாவது அத்தேச குடிசனத்தொகையில் 43 சத வீதத்துக்கு மேற்பட்டோர் கத்தோலிக்கராவர். அத்தேசத்திலுள்ள பல்வேறு கிறீஸ்தசபைகளில் மிகப்பெரும் சமயகுழுவாய் விளங்குவது கத்தோலிக்க திருச்சபையே. சென்ற 10 வருடங்களிலும் அங்கு கத்தோலிக்கர் பத்துலட்சம்பேரால் அதிகரித்திருக்கின்றனர். இரண்டாவது பெரிய சபையாய் இருந்துவருவது, கனடாவின் ஐக்கிய கிறீஸ்தசபை என்ற புரொட்டஸ்தாந்தசபையே. இது 28,67,271 பேரைக் கொண்டது.

## ஞாபகதபால் முத்திரைகள்

பார்சலோனநகர சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின் ஞாபகார்த்தமாக ஸ்பானிய நிதிமந்திரி காரியாலயம் இரு தபால் முத்திரைகளைப் பாவனைக்கு விடுத்திருக்கின்றது. இவற்றில் 90 சென்ரிம் பெறுமதியான முத்திரை சாதாரண தபால்முத்திரையாகும். மற்றது, ஒரு பெசெற்ரு பெறுமதியுள்ளதான ஆகாயத்தபால் முத்திரையாகும். இந்த முத்திரைகள் இவ்வருடமுழுவதும் விற்பனவில் இருந்துவரும். இருப்பு முடிகிறவரையிலே செல்மதியுடையனவாய் இருக்கும்.

## கைதிகளின் நம்பிக்கை

கம்யூனிஸ்த குரூர ஆட்சியின் கீழுள்ள செக்கோசிலவாகியாவைச்சேர்ந்த யாச்சிமோவ் எனுமிடத்து அபகீர்த்திபடைத்த யூறேனிய சுரங்கங்களில் வேலைசெய்கின்ற கைதிகள் அங்கு சுரங்கவெடி வைப்பதற்கென உபயோகிக்கப்பட்ட கம்பித்துண்டுகள் கொண்டு அந்தரங்கமாக அறையுண்ட திருச்சிலுவைகள் செய்துவருகிறார்களென அங்கிருந்தும் தப்பியோடி வெளியேறிய ஒருவர் தெரிவிக்கின்றார். இவர் சுதந்திர ஐரோப்பிய வானொலியில் பேசியபோது, சில கைதிகள் இரும்புக்கம்பிகள் கொண்டு செபமாலைகள் செய்து அவற்றைத் தங்களுடன் இரகசியமாகக் கொண்டுசெல்கிறார்களெனத் தெரிவித்திருக்கிறார். இந்தக்கைதிகளின் வாழ்க்கையிலே உறுதிபெற்றிருக்கும் காரியங்கள் எவையெனில், தேவநீதியானது ஓர்நாள் கம்யூனிஸ்தர்களின் அநீதியையும், இரக்கமற்ற மிருகத்தன்மையையும் வெற்றிகொள்ளுமென்ற திடநம்பிக்கையே என்றும், தங்கள் கம்யூனிஸ்தகாவலர்களின் கிறீஸ்து சமயவிரோத ஆவேசமனப்பான்மையைப் பறுவாய்பண்ணாது அவர்கள் சமயத்தை கெட்டியாகக் கடைப்பிடித்து வருவதேயென்றும் அவர் கூறுகின்றார்.

—1949-ம்ஆண்டிலே சீனதேசத்தில் பிறநாடுகளைச்சேர்ந்த புரொட்டஸ்தாந்தமிஷனரிமார்களாய் 3,000 பேர் இருந்துவந்தவிடத்தில் தற்போது நூறுபேருக்குக் குறைவாகவே அங்கு தங்கியிருப்பதாய்ப் புரொட்டஸ்தாந்தர் அறிவிக்குஞ் செய்திகளிலிருந்து புலனாகின்றது. கம்யூனிஸ்தர்கள் சீனவைக் கைப்பற்று முன்னரே அமெரிக்க புரொட்டஸ்தாந்த மிஷனரிமார் அநேகர் அங்கிருந்தும் வெளியேறிவிட்டார்கள்.

## சதா சகாயமாதாவைநோக்கிச் சொல்லத்தகும்செபம்

சதாசகாயமாதாவே, உமதுபிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.
( 3 முறை )

அதிபரிசுத்த கன்னிமரியாயின் அர்ச். மாசில்லாதஉற்பவம் ஸ்திக்கப்படுவதாக!

பரமண்டலம் 1 முறை, பிரியதத்தம் 4 முறை, திரித்துவஸ்தோத்திரம் 1 முறை.

முதல்வர்:— உமது உற்பவத்தில் மாசில்லாதவளாயிருந்த கன்னிமரியாயே.

துணைவர்:— உமது திருக்குமாரனின் பரமபிதாவினிடம் எங்களுக்காகப் பரிந்துபேசியருளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்

சருவேசுரா சுவாமீ! தேவரீர் மாசில்லாக் கன்னிகையின் திரு உற்பவத்திலே உம்முடைய திருச்சுதனுக்குத் தகுதியான வாசஸ்தலம் ஒன்றை ஆயத்தப்படுத்தியருளினீரே. எங்கள் ஆண்டவருடைய திருமரணத்தை உத்தேசித்து அவர் திருத்தாயாரைச் சகல பாவஅசுத்தங்களிலும்நின்று காத்துவைத்த தேவரீர், அந்தத்தாயாருடைய மன்றாட்டினால் நாங்களும் பரிசுத்தராய்த் தேவரீரிடத்தில் வந்துசேரத் தயவுபண்ணியருளவேணுமென்று எங்கள்நாயகன் யேசுக்கிறீஸ்துவின் மூலமாய் உம்மைவேண்டிக்கொள்ளுகிறோம், ஆமென்.
( 300 நாட்பலன் )

### நவநாட் செபங்கள்

சதாசகாயமாதாவே, உம்மிடம் சரணடைந்து நம்பிக்கையுடன் உமதுபாதத்தண்டையிலிருக்கும் நீசப்பாவியாகியஎன்னை உற்றுநோக்கியருளும். இரக்கத்தின்மாதாவே, என்பேரில் இரக்கமாயிரும். பாவிகளின் அடைக்கலமும், நம்பிக்கையுமென எல்லோராலும் அழைக்கப்படும்நீரே எனது அடைக்கலமும், நம்பிக்கையுமாயிரும். யேசுநாதரின் சிநேகத்துக்காக எனக்குச் சகாயம்புரிந்தருளும். சதாகாலமும் உமது சேயாகப்பாராட்டி உமக்குக்கையளிக்கும் இந்தநீசப்பாவியாகிய என்னிடம் உமதுகரங்களை நீட்டியருளும். உம்மில் நம்பிக்கைவைப்பது தான் நித்தியஈடேற்றத்தின் ஈடுஎன்று நான்எண்ணுகிறேன். நான் உம்மில்வைக்கும் இந்தநம்பிக்கையைச் சருவேசுரன் தமதுஇரக்கத்தால் எனக்குத்தந்ததற்காக நான்அவரை வாழ்த்தித்துதிக்கிறேன். உம்மிடம் சரண்அடையாததினால் இவ்வளவுகாலமும் நான் அநேக தடவைகளில் நீசத்தனமாய்ப் பாவச்சோதனைகளில் விழுந்திருக்கின்றேன். ஆனால், உமதுஉதவியினால் நான் வெற்றியடைவேனென்று எனக்குத்தெரியும். என்னை உமக்கு நான்கையளித்தால், நீர்எனக்கு உதவிசெய்வீர்என்றும் எனக்குத்தெரியும். ஆனால், விழப்போகுந் தருவாயில் உமதுஉதவியைக் கேட்காமல் விட்டுவிடுவேனோ என்றும், அதனால் எனதுஆத்துமத்தை இழந்துபோக நேருமோஎன்றும் அஞ்சுகிறேன்.

ஆகையால் இந்தவரப்பிரசாதத்தை நீர் எனக்குப்பெற்றுத்தரும்படி உம்மைவேண்டி, எனக்குத்தெரிந்த முறையிலும், என்னால்இயன்ற அளவிலும் உம்மைக் கெஞ்சிமன்றாடுகிறேன். அதாவது, நரகம் என்னுடன் போர்பொருதும்பொழுது உம்மிடம் நான் சரண்புகவும், "ஓ! மரியாயே எனக்கு உதவிசெய்யும், சதாசகாயமாதாவே எனதுஆத்துமத்தை நான் இழந்துபோக விட்டுவிடாதேயும்" என்று உம்மைநோக்கிச்சொல்லவும் கிருபைசெய்தருளும், ஆமென்.
( பிரியதத்தமந்திரம் 9 முறை )

அர்ச்சியசிஷ்டமரியாயே, கஸ்திப்படுகிறவர்களுக்கு உமதுசகாயம் அளித்தருளும். மனத்திடன் இல்லாதவர்களுக்கு உதவிபுரிந்தருளும். அழுகிறவர்களை மகிழச்செய்தருளும். பொதுசனத்துக்காக வேண்டியருளும். குருமார், மேற்றிராணிமாருக்காகப் பரிந்துபேசியருளும். கடவுளுக்குத் தங்களை அர்ப்பணம்செய்த சகலபெண்மணிகளுக்காகவும் மனுப்பேசியருளும். உமது சதாசகாயத்தை வேண்டுவோர் உமதுஉதவியை உணரச்செய்தருளும்.

முதலோதி:— ஓ! மாதாவே, நீர் எங்களுக்கு ஓர்அடைக்கலமாய் இருக்கிறீர்.

துணைவர்:— குறைகளிலும் துன்பங்களிலும் ஓர் உதவியாகவும் இருக்கிறீர்.

### பிரார்த்திக்கக்கடவோம்

ஓ, ஆண்டவரே! யேசுக்கிறீஸ்துவே! உமதுமாதாவாகிய மரியாயை எப்பொழுதும் உதவிசெய்யத் தயாராயிருக்கும் தயாரக எங்களுக்குத் தந்தருளச் சித்தமானீரே. அவளுடைய அற்புதமான சாயலை வணங்கி அவளது அன்னைக்குரியஉதவியை மிகவும்ஆவலுடன் வேண்டிநிற்கும்நாங்கள் உம்முடைய இரட்சணியத்தின்பலனைச் சதாகாலமும் அனுபவிக்கத் தகுதியுள்ளவர்களாயிருக்கக் கிருபைசெய்யும்படி தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். சதாகாலமும் சீவியராய் இராச்சியபரிபாலனம் பண்ணுகிறவராயிருக்கிற சருவேசுரனே, ஆமென்.

எங்கள் பரிசுத்த பிதாவாகிய பாப்பானவருக்காக
1 பர. 1 பிரி. 1 திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஆனிமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 6 | அ. நொர்பேர்த்தப்பர் | (சி) |
| சனி | 7 | அ. உரோபேர்த்தப்பர் | (வெ) |
| ஞா | 8 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 1-ம் ஞாயிறு— திரித்துவத்தின் திருநாள் | (வெ) |
| திங் | 9 | அ. பிரிமுசப்பர் | (வெ) |
| செ | 10 | அ. மார்க்கரித்தம்மாள் | (வெ) |
| புத | 11 | அ. பர்ணபாஸ் | (சி) |
| வி | 12 | தேவநற்கருணைத்திருநாள் | (வெ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1952-ம் ஆண்டு

ஆனி மாதம் 5-ந் திகதி


## சனநாயக அரசியல்

ஸ்ரீலங்காவிலே முன்னொரு போதுமில்லாத பெரும் ஆர்ப்பரிப்புகள், அரசியற்பிரசாரங்கள் மத்தியில் நடந்தேறிய பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிந்துவிட்டது. உலகின் சனநாயக சுதந்திரநாடுகளையும், சர்வாதிகார நாடுகளையும் என்றுமில்லாத வகையிலே ஈர்ந்து கொண்டிருந்த இலங்கைப்பொதுத்தேர்தல் நடந்துவிட்டது. அதன்விளைவாக எமது செல்வ நாட்டிலே சனநாயக சுதந்திர ஆட்சி தலைநிமிர்ந்தது. நாஸ்திக சர்வாதிகார கொடுங்கோலாட்சி இடம்பெறாது தலைகவிழ்ந்தது. தங்கள் வாக்குரிமையைப் பிரயோகித்து, எந்தக் கட்சி அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்று வாக்காளர் தீர்ப்பளித்து விட்டார்கள். அதாவது புரட்சிகளை உண்டுபண்ணி நாட்டைப்பாழாக்கும் நாஸ்திக பொதுவுடைமைத் தீயபலங்களை நிராகரித்து, மனித சுதந்திரங்களைப் பாதுகாத்து நாட்டிலே சுபீட்சத்தையும், சமாதானத்தையும், சுபவாழ்வையும் விருத்திசெய்து நிலைநாட்டக்கூடியது சனநாயக ஆட்சியேயென்பதை அழுத்தந்திருத்தமாக முடிபுசெய்து விட்டார்கள். அதனால் சனநாயகம் தழைத்தது. சுதந்திர இலங்கையின் பெருமைவாய்ந்த சரித்திரத்திலே ஓர் புதிய சகாப்தம் பிறந்தது. கடவுட்பக்தர்களும், சனநாயக சுதந்திர அபிமானிகளும் அல்லும்பகலும் அயராமல் உழைத்துவந்ததின் பயனாக எவருமே வியக்கத்தக்கவிதமாக ஐக்கியதேசியக்கட்சியும், அதனைச்சார்ந்த தமிழ்க்காங்கிரஸ் முதலாம் கட்சிகளும் தேர்தலில் அமோகமான வெற்றியீட்டியுள்ளன. அதனால் பிரதமர் டட்லி சேனநாயகஅவர்கள் தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள சனநாயகஅரசியலைத்தேசபிதாவென்றுகொண்டாடப்படுகின்ற தமதுதந்தையாரின் சீரிய அடிச்சுவடுகளைப்பின்பற்றிச் சீராய்ச் சிறப்பாய் நடத்திவரவேண்டியது அவர்மேற்சுமந்த பாரமான கடமையாகும். யாழ்ப்பாணத் தமிழ்மக்களுக்கும் நாம் இந்த வேளை நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். முதலாவது அவர்கள் நமது ஆலோசனையைமேற்கொண்டு அரசாங்க கட்சியுடன் ஒத்துழைக்க முன்வந்த தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்து வாக்களித்ததும், இரண்டாவதாக யாழ்ப்பாணத்தொகுதிகளிலே தலைகாட்டிய நாஸ்திககம்யூனிஸ்த—சமசமாஜ அபேட்சகர்கள் படுதோல்வியுறச் செய்ததும் பாராட்டத்தக்கனவாகும். இந்த நாஸ்திக தீயபலங்கள் எவ்வளவு தூரம் எமதுநாட்டில் இடங்கோலிவிட்டதென்பதை இப்போது கண்டுகொண்டநாம் அவைகள் இனிமேல் முற்றாக அழிந்தொழிந்துபோகும்படியாக ஆனபிரயத்தனஞ் செய்வது கடவுட்பக்தர்கள், சுதந்திர அபிமானிகளின் பெருங்கடனென்க.

## கம்யூனிஸ்த ஆபத்து

"இது எனக்குக்கிடைத்த ஒரு வெற்றியன்று; ஆனால், எனது கட்சிக்கும், எனதுகட்சி ஆதரிக்கும் சனநாயக வாழ்க்கை முறைக்கும் கிடைத்தவெற்றியாகும். கற்றறிந்தமக்களை அதிகமாகக்கொண்ட கொழும்புநகர் தெற்குத்தொகுதி வாக்காளர் தொடர்ந்து மூன்றாவதுமுறையாகச் 'சமசமாஜிஸம்' என்னும் நாசக்கொள்கையையும், முதலாவது அதேபோன்றமுறையாகத் திரு. பண்டாரநாயகாவின் கொள்கையையும் நிராகரித்துவிட்டனர்" என்பதாக மேஜர் ரி. எவ். ஜயவர்த்தன தேர்தலில் வெற்றிபெற்றபின் கொழும்பு தெற்குத் தொகுதிவாக்காளர்களுக்கு ஆற்றியசொற்பொழிவில் கூறினார்.

மேஜர் ஜயவர்த்தன மேலும் கூறியதாவது:— எனதுவெற்றி ஆரம்பத்தின் ஆரம்பமட்டுமேயாகும். நாங்கள் கம்யூனிஸ்தர்களையும், அவர்களுடன் நேசம் பாராட்டுபவர்களையும் எதிர்த்துப் போராடுவோம். வாழ்க்கையில் நாம் புனிதமானவையெனக் கருதுபவற்றையும், எங்களுடைய மதங்களையும், எங்களுடைய தேசிய சுதந்திரத்தையும், எங்களுடைய சொந்தச்சுதந்திரங்களையும் நாம் பாதுகாப்பதாயிருந்தால், தேர்தல்களில் அவர்களை எதிர்த்துப் போராடித் தோற்கடிக்கவேண்டும். பாராளுமன்றத்தில் அவர்களை எதிர்த்துப் போராடித் தோற்கடிக்கவேண்டும். எல்லாவிடங்களிலும் அவர்களை எதிர்த்துப் போராடித் தோற்கடிக்கவேண்டும். இதுவரை இந்நாட்டுமக்கள் கம்யூனிஸத்தையோ அல்லது சமசமாஜிஸத்தையோ ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஏனென்றால், அதை ஒருதொல்லையென மட்டும்கருதினர். ஆனால், இப்பொழுது அது மக்களைப்பயமுறுத்தும் ஒரு ஆபத்தாகிவிட்டது. அது இவ்வாறு நீடித்திருக்கக்கூடாது. இச்சிறியதீவினின்றும் அது துடைத்தொழிக்கப்படவேண்டும். எங்களுடைய உற்சாகத்தைக் காலநிலையோ அல்லது வெள்ளமோ குறைத்துவிடக்கூடாது. கடந்த பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தில் எங்களுடைய அரசாங்கம் "மலேரியா" ஆபத்தை எங்களிடையேயிருந்து நீக்கியுள்ளது. இந்தப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தில் இந்தக்கம்யூனிஸ்த ஆபத்தை எங்களிடமிருந்து அவர்கள் நீக்கிவிடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. தீய சக்திகளுக்கெதிராக நடைபெறும் இப்போராட்டத்தில் எங்களைப் பின்பற்றும்படி மற்றத்தொகுதிகளிலுள்ள வாக்காளர்களையும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன். வெற்றி எங்களுடையதே. எனது வெற்றி அதற்கு ஆரம்பம் மட்டுமேயாகும்.

எனக்கு உதவிசெய்தவர்கள் எனக்களித்த ஆதரவுக்காக அவர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்னை எதிர்த்தவர்கள் சனநாயகத்தின் பலத்தைத் தங்களுக்கு எடுத்துக்காட்ட எனக்கு அளித்த சந்தர்ப்பத்திற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பரிசுத்த தமதிரித்துவத்தின்

## திருநாள்

**சுவிசேஷ வாசிப்பு**

(மத். 28 : 18—20)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களைநோக்கித் திருவுளம்பற்றினதாவது: பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வாதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், நீங்கள் போய்ச் சகலசாதி சனங்களுக்கும் உபதேசித்துப் பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாவற்றையும் அநுசரிக்க அவர்களுக்குப் போதியுங்கள். இதோ! நான் உலக முடிவுமட்டும் எக்காலமும் உங்களோடுகூட இருக்கிறேன் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## புதிய மந்திரிசபை

பிரதமர் டட்லி சேனநாயகஅவர்கள் உட்படப் புதிய மந்திரிசபையைச் சேர்ந்த மந்திரிமார் 14 பேரும், பாராளுமன்றக் காரியதரிசிகள் 10 பேரும் சென்ற திங்கட்கிழமை பிற்பகல் இராணிமாளிகையில் விசுவாசப்பிரமாணஞ் செய்துகொண்டார்கள். மந்திரிமாரின் நாமங்கள் வருமாறு:

1. பிரதமரும், பாதுகாப்பு - வெளிநாட்டு மந்திரியும்—திரு. டட்லி சேனநாயக.
2. நிதி மந்திரி — திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன.
3. நீதி மந்திரி — சேர் லலிதா இராசபக்ஸ.
4. போக்குவரத்து - பகிரங்க வேலை மந்திரியும், சபைமுதல்வரும்—சேர் ஜோண் கொத்தலாவல.
5. உள்நாட்டு - கிராமாபிவிர்த்தி மந்திரி—திரு. ஏ. இரத்நாயக.
6. உணவு - கமத்தொழில் - கூட்டுறவுமுயற்சி மந்திரி — சேர் ஒலிவர் குணதிலக.
7. கைத்தொழில் - கடற்தொழில் மந்திரி—திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

### அர்ச். அந்தோனியார்கோவில் பாஷையூர்

மாலைஆராதனை — ஆனி 1-ந்திகதி தொடக்கம் 11-ந்திகதிவரையும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

**12-ந்திகதி தேவநற்கருணைத் திருநாள்.**

காலை 6-15—திருநாள் பாடற்பூசை

மாலை 4-30—செபமாலை, வேஸ்பர், சற்பிரசாத ஆசீர்வாதம், அர்ச். அந்தோனியாரின் பக்திமுயற்சி.

**13-ந்திகதி** காலை 5 மணி முதல் 6 மணிவரை திவ்வியபூசை.

7 மணிக்கு திருநாள் பாடற்பூசை

மாலை 4-30 செபமாலை, அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம்.

சற்பிரசாதஆசீர்வாதம்.

கட்டளைக்குரவர்

8. சுகாதார மந்திரி—திரு. ஈ. ஏ. நுகவெல.
9. காணி - காணிஅபிவிருத்தி மந்திரி—திரு. பி. பி. புலங்குலம திசாவை.
10. தபால் - தகவல் மந்திரி—திரு. வி. நல்லையா.
11. தலஸ்தாபன மந்திரி—திரு. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா.
12. தொழில் - சமூகசேவா மந்திரி —டக்றர் சி. எம். கலீல்.
13. வர்த்தக மந்திரி—திரு. ஆர். ஜி. சேனநாயக.
14. கல்வி மந்திரி — திரு. எம். டி. பண்டா.

### பாராளுமன்றக் காரியதரிசிகள்

[ உதவிமந்திரிமார் ]

1. மேஜர் எம். ஜயவிக்கிரம, (பாதுகாப்பு - வெளிநாட்டு)
2. திரு. வி. குமாரசாமி, (உணவு - கமத்தொழில்)
3. திரு. எம். சேனநாயக, (உள்நாட்டு)
4. திரு. சி. ஈ. ஏ. அற்றிக்கலே, (சுகாதார)
5. ஜனாப் எம். எம். இபிறாஹிம், (தலஸ்தாபன)
6. திரு. ரி. பி. பனபொக்கை, (நீதி)
7. செனற்றர் எல். எல். ஹண்றர், (நிதி)
8. திரு. வி. இரத்நாயக, (காணி)
9. திரு. என். எச். கீர்த்திரத்ன, (தபால் - தகவல்)
10. மேஜர் ரி. எவ். ஜயவர்த்தன, (தொழில்)

## புதியபாராளுமன்றம்

இலங்கையிலே சென்றவைகாசி மாதம் 24-ம் 26-ம் 28-ம் 30-ம் திகதிகளில் நிகழ்ந்த பொதுத்தேர்தலிலே ஐக்கியதேசியக்கட்சி எல்லாமாக 54 ஸ்தானங்களைப் பெற்றுக்கொண்டது. அதாவது இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்திலே அது ஏனையகட்சிகள்யாவும் மொத்தமாகப் பெற்றுள்ள ஸ்தானங்களிலும் கூடியதொகையான ஸ்தானங்களை வெற்றிகொண்டிருக்கிறது.

புதியபாராளுமன்றத்திலே அந்தந்தக்கட்சிகள் வகித்துள்ள ஸ்தானங்களின்தொகை விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| ஐக்கியதேசியகட்சி | 54 |
| ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி | 9 |
| லங்காசமசமாஜகட்சி | 9 |
| தமிழ்க்காங்கிரஸ் | 4 |
| ஐக்கியமுன்னணிக் கட்சி (கம்யூனிஸ்தகட்சியும் லங்காசமாஜக்கட்சியும் ஒன்றுசேர்ந்தது, | 3 |
| தமிழரசுக்கட்சி | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இலங்கைத்தொழிற்கட்சி | 1 |
| மக்கள் குடியரசுக்கட்சி | 1 |
| சபாநாயகர் உட்படச் சுயேச்சைவாதிகள் | 11 |

முந்தியபாராளுமன்றம் கலைக்கப்பட்டபோது, சனப்பிரதிநிதிகளும், அரசினர் நியமனஞ்செய்த பிரதிநிதிகளுமாகத் 99 பேர் இருந்தார்கள். மாஜி பிரதமரின் மரணத்தாலும், அக்குறெசைப் பிரதிநிதியின் மரணத்தாலும் இரண்டு ஸ்தானங்கள் காலியாயிருந்தன.

பழையபாராளுமன்றத்திலே அந்தந்தக்கட்சிகள் வகித்திருந்த ஸ்தானங்களின் தொகை விபரங்கள்வருமாறு :

| | |
|---|---|
| ஐ. தே. கட்சி | 43 |
| நவ. ல. ச. ச. கட்சி | 14 |
| ஸ்ரீல. சு கட்சி | 9 |
| இலங்கை இந்தியகாங்கிரஸ் | 7 |
| தமிழ்க்காங்கிரஸ் | 6 |
| கம்யூனிஸ்த கட்சி | 3 |
| ல. ச. ச. (புரட்சி) | 2 |
| குடியரசுக் கட்சி | 2 |
| தமிழரசுக்கட்சி | 2 |
| தொழிற்கட்சி | 1 |
| சுயேச்சை (சபாநாயகர் உட்பட) | 4 |

## சங். ஏ. எஸ். பீற்றர் பிறதர் அவர்களின் தேகவியோகம்

இலங்கைச் சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசகர்களில் ஒருவராய், காலங்கண்ட ஓர் ஆசிரியதுறவியாய், சிறுவர்களுக்குக் கல்வியறிவூட்டுவதிலும், அவர்களை நல்வழிப்படுத்துவதிலும் மிக்கான கரிசனையுள்ளவராய், பிறரின் சுகசேமாதிகளை விசாரித்து எவ்வெவர்மாட்டும் அன்பாதரவுடையராய், நமது ஆரம்பகல்வி ஆசிரியராய் விளங்கியிருந்தவரான சங். ஏ. எஸ். பீற்றர் பிறதர் அவர்கள் விருத்தாப்பியநோய் கண்டிருந்து கல்முனையிலுள்ள தமதுசபை ஆச்சிரமத்திலே சென்ற 19-ந்திகதி திங்கட்கிழமை காலஞ்செல்லலாயினர் எனும் துயரசெய்தியறிந்து பெரிதும் மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்குவயசு 73.

சங். பிறதர் பீற்றர் அவர்கள் 1874-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 21-ந்திகதி நுணுவில்எனும் கிராமத்திலே ஓர் சைவக்குடும்பத்தில் பிறந்து, தம்மைஆட்கொண்ட கிறீஸ்துபெருமானின் பக்தராயினர். பின்னர் கொழும்புத்துறைப் போதனுகழகத்தில் பயின்று பரீட்சைகளிலெல்லாம் மிக்ககண்ணியத்துடன் ஆங்கேறினாரகலின் அக்கால வழக்கப்படி "விக்டோறியா சின்னம்" எனும் பரிசில் சன்மானிக்கப்பெற்று ஓர் ஆசிரியராக வெளியேறினர். அதன்மேல் தம்து உள்ளத்திலெழுந்த சந்நியாசதேவஅழைத்தலின் குரலொலிக்குச் செவிசாய்த்துச் சஞ்சூசையப்பர் சந்நியாசசபையிலே ஓர் துறவியாகச் சேர்ந்துகொண்டனர். இவர் அறிவு ஆற்றலிலும், விவேக சாதுரியத்திலும், உத்தம சந்நியாசவாழ்க்கையிலும் மேம்பட்டு விளங்கினாரகலின் அக்காலத்திலே மன்னார், பேசாலை முதலாமிடங்களில் புதிதாகத் திறக்கப்பட்ட மடங்களுக்கெல்லாம் ஓர் முன்னோடியாக இவரும் அனுப்பிவைக்கப் பெற்றிருந்தார். இளவாலை, ஊர்காவற்றுறை, கொழும்புத்துறை ஆதியாமிடங்களிலும் இவர் தொண்டாற்றியிருக்கின்றார். ஆசிரியசேவையிலிருந்து இளைப்பாறியபின் இவர் ஆங்காங்கு தமது உடன் சகோதர சந்நியாசர்களுக்கு வேண்டியஉதவிகளை மனப்பூர்வமாகச் செய்வதில் ஈடுபட்டிருந்தார். கடைசியாய் முற்றாக எந்தவேலையையும் செய்ய முடியாதவரானபோது, செபத்திலும் தியானத்திலும் தமது அந்தியகாலத்தைச் செலவிட்டுப் பரலோகத்துக்குப் பழுத்தபழமாய் அந்தியவேளையை எதிர்பார்த்தவண்ணம் இருந்தார். கடைசியாக விருத்தாப்பியநோய் கண்டு சென்றமாசம 16-ந் திகதியன்று தமது சந்நியாசசகோதரர் புடைசூழ அந்திய தேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்றுப் 19-ந் திகதி உருமத்தின்போது அமலன்பதம் சேரலாயினர்.

சங். பீற்றர் பிறதரென்றால் அவரது பழையமாணவர்களின் உள்ளத்திலே ஓர்வித அன்புவெள்ளம் தானாகவே பெருக்கெடுத்துவிடும். ஏனெனில், அவர் ஓர்குழந்தைஉள்ளம் — சுத்த மனம் படைத்தவர். தமது மாணவர்களின் வருகால நல்வாழ்விலே என்றும் கருத்துடையவர். அவர்கள் யாதும் குழப்பஞ்செய்யும்போது பலவந்தமாகக் கோபத்தைவருவித்துத்தான் அவர்களைத் தண்டிப்பார். அப்பால் தமது அன்புததும்பும் புன்னகையால் அவர்களைப் பிதாவைப்போன்று அணைத்துக்கொள்வார். இலக்கணம், இலக்கியம், கணிதம் ஆதியபாடங்களைப் படிப்பிப்பதில் அதிக திறமை காண்பித்துவந்தார். என்னநேர்ந்தபோதிலும் எல்லாம் தேவசித்தம் என்று சொல்லித் தமது கடமைகளைப் பிரமாணிக்கமாக ஆற்றுவதில் என்றைக்கும் மிகுந்த சிரத்தையாயிருப்பார். பிறதர் அவர்களின் மரணத்தாலே சஞ்சூசையப்பர் சந்நியாசசபை மற்றுமோர் உத்தமதுறவியை இழந்ததேயென்று பெரிதும் கவலைகொள்ளுகின்றோம். இவரை இழந்து துயருறும் சகோதரசந்நியாசர்களுடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## திரு. ஆர். ஆர். நல்லையா அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணத்திலே பிரபலம்வாய்ந்த வழக்கறிஞர்களில் ஒருவராய், பிரஸ்தாபமாக எங்கும் அறியப்பெற்றவராய், செல்வம்செல்வாக் குடையராய், சமூக சேவைஆதியவற்றில் சிறந்தவராய், யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான பல்வேறு நல்லியக்கங்களிலும் எப்போதுமே முன்னணியில் நின்றுவந்த பெரியாருள்ஒருவராய் விளங்கியிருந்தவரான திரு. ஆர். ஆர். நல்லையா, ஜே. பி., ஓ. பி. ஈ. அவர்கள் சிலகாலமாகச் சுகத்தாழ்வுற்றிருந்து சென்ற வெள்ளிக்கிழமை தமது 68-ம் வயதிலே காலஞ்சென்ற துயரசெய்திஅறிந்து மனவருத்தமுற்றோம். இவர்முறையே யாழ்ப்பாணநகர் சுகாதாரசங்க, பட்டின சங்க, நகரசங்கமாதியாம் தலஸ்தாபன ஆட்சியின்கீழ் இருந்துவந்த கடைசியானசுமார் 40 வருடங்களிலும் அவற்றிலேஇவர் அங்கத்தவராயும், பல வருடகாலம் பட்டினசங்கதலைவராயும், பின்பு நகரசங்க அங்கத்தவராயுமிருந்து யாழ்ப்பாணநகரின் முன்னேற்றத்திற்காக அரும்பணியாற்றியிருக்கின்றார். கீழைத்தேச சிற்பமாதிரியாய்த் தற்போது நிறுவிநிற்கும் யாழ்ப்பாண நகர மண்டபம் இவரின்ஞாபகத்தை இனிதேநிலைநாட்டப் போதியது. யாழ்ப்பாண ஆபத்துக்குதவிச் சங்கத்தின் காரியதரிசியாயிருந்து சமூக சேவைகளிலே முன்னணியில்நின்று உழைத்துவந்தார். வழக்கறிஞர் என்றமட்டிலும், முடிக்குரியவழக்கறிஞர் என்றமட்டிலும் இவர் அடைந்துள்ளபெரும்புகழ் பாராட்டத்தகுந்தது. யாழ்ப்பாணத்திலே ஓர்நியாயவாதியாயிருந்துகாலஞ்சென்ற திரு. ரி. ஆர். நல்லையாஅவர்கள் இவரின் மூத்த சகோதரராவர். தற்போது இங்கிலாந்திலே சஞ்சரித்துவருகின்ற டக்றர் என். ஆர். நல்லையாஅவர்கள் இவரின் இளையசகோதரராவர். இர்வமரணத்தாலே யாழ்ப்பாணத்தமிழுலகம் ஓர் பெரியாரை இழந்துவிட்டதெனலாம். இவர்பிரிவால்வருந்தும் பாரியார், பிள்ளைகள், மருகர், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

# பொதுத்தேர்தல் முடிவுகள்

### 26—5—52—திங்கள்

இன்றுதினம் 24 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. இவற்றிலே பிரதமர் டட்லி சேனநாயகஅவர்களின் தொகுதியாகிய டெடிகமமும் ஒன்றாகும். இன்றையதேர்தலிலே ஐக்கிய தேசியகட்சி அபேட்சகர்களாய்நின்ற 22 பேரில் ஒரேயொருவர் நீங்கலாக எஞ்சிய 21 பேரும், தமிழ்காங்கிரஸ் அபேட்சகர்கள் இருவரும் வெற்றிபெற்றார்கள். இன்றுதினம் அபேட்சகர்களாய்நின்ற நவலங்கா சமசமாஜக்கட்சி அபேட்சகர்கள் 19 பேரும் ஒருவர்தப்பாது ஒருங்கே படுதோல்வியடைந்தார்கள். இன்று வெற்றிபெற்ற அபேட்சகர்களின் நாமங்களும், அவர்களின் தொகுதிகளும், அவர்கள்பெற்ற அதிகப்படியான வாக்குகளின் தொகைகளும் வருமாறு :

**1. டெடிகமம்**
திரு. டட்லி சேனநாயக,
ஐ. தே. கட்சி 21,206
அதிகப்படி 15,559

**2. அனுராசபுரம்**
திரு. பி. பி. புலங்குலம,
ஐ. தே. கட்சி 6,280
அதிகப்படி 3,919

**3. வட்டகாமம்**
திரு. ஏ. இரத்நாயக,
ஐ. தே. கட்சி 14,264
அதிகப்படி 8,883

**4. தலவாக்கொல்லை**
திரு. எச். ஈ. பி. டி மெல்,
ஐ. தே. கட்சி. 1,198
அதிகப்படி 352

**5. நிக்கவரத்தியா**
திரு. கவிசேன ஹேரத்,
ஐ. தே. கட்சி 11,999
அதிகப்படி 5,000

**6. மதவாச்சி**
திரு. எம். சேனநாயக,
ஐ. தே. கட்சி 8,112
அதிகப்படி 6,073

**7. சாவகச்சேரி**
திரு. வி. குமாரசாமி,
தமிழ்காங்கிரஸ் 14,801
அதிகப்படி 9,138

**8. பருத்தித்துறை**
திரு. ரி. இராமலிங்கம்,
தமிழ்காங்கிரஸ் 11,609
அதிகப்படி 2,992

**9. பலாங்கொடை**
இருபிரதிநிதிகள்
திரு. ஏ. எவ். மொலமுறே,
ஐ. தே. கட்சி 32,233
திரு. ஈ. டபிள்யு. மத்தியூ,
ஐ. தே. கட்சி 20,710
1-வது அதிகப்படி 11,523
2-வது அதிகப்படி 4,070

**10. தெனியாயா**
திரு. விக்றர் இரத்நாயக,
ஐ. தே. கட்சி 13,808
அதிகப்படி 4,634

**11. வெலிகாமம்**
திரு. மொண்ரகு ஜயவிக்கிரம,
ஐ. தே. கட்சி 16,397
அதிகப்படி 2,591

**12. ஹோறணை**
திரு. எம். டி. எச். ஜயவர்த்தன,
ஐ. தே. கட்சி 21,746
அதிகப்படி 13,497

**13. மினிப்பை**
திரு. எச். பி. றம்புக்வெலை திசாவை,
ஐ. தே. கட்சி 10,696
அதிகப்படி 6,791

**14. கோட்டகலை**
திரு. யு. பி. உனம்புவை,
ஐ. தே. கட்சி 2,711
அதிகப்படி 1,334

**15. அப்புத்தளை**
திரு. டபிள்யு. ஏ. றட்டுவத்தை,
ஐ. தே. கட்சி 2,444
அதிகப்படி 1,624

**16. பண்டாரவளை**
திரு. கே. டி. சுகததாச,
ஐ. தே. கட்சி 6,392
அதிகப்படி 4,126

**17. கிவிற்றிக்கலை**
திரு. எச். வெரகம,
ஐ. தே. கட்சி 12,785
அதிகப்படி 3,528

**18. நாத்தாண்டியா**
திரு. அல்பேட் எவ். பீரிஸ்,
சுயேச்சை 14,593
அதிகப்படி 306

**19 வாரியப்பொலை**
ஐவன் ரி. தசநாயக,
ஐ. தே. கட்சி 19,662
அதிகப்படி 2,912

**20. தம்பதேனியா**
திரு. ஆர். ஜி. சேனநாயக,
ஐ. தே. கட்சி 22,003
அதிகப்படி 17,563

**21. ஜா-எலை**
திரு. டி. பி. ஜயசூரிய,
ஐ. தே. கட்சி 18,212
அதிகப்படி 11,904

**22. கம்பகா**
திரு. எஸ். டி. பண்டாரநாயக
ஸ்ரீல. சு. கட்சி 19,417
அதிகப்படி 871

**23. நீர்கொழும்பு**
திரு. ஏ. என். டி. ஏ. அபயசிங்க,
ஐ. தே. கட்சி 22,721
அதிகப்படி 13,325

**24 அகலவத்தை**
திரு. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா,
ஐ. தே. கட்சி 13,659
அதிகப்படி 7,032

### 28—5—52—புதன்

இன்று நடைபெற்ற மூன்றாம்நாள் தேர்தலிலே ஐக்கியதேசியகட்சிக்குப் 11 ஸ்தானங்கள் கிடைத்தன. யாழ்ப்பாணத்தேர்தலில் கைத்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் திரும்பவும் வெற்றிபெற்றதும், வெள்ளவத்தை-கல்கிசைத் தேர்தலில் மாக்ஸியவாதிகளின் பிரதம தலைவர்களில் ஒருவரான டக்றர் கொல்வின் ஆர். டி. சில்வா, வர்த்தகமந்திரியார் திரு. எச். டபிள்யு. அமரசூரிய எனுமிருவரும் தோல்வியுற்றதும் இன்றைய தேர்தலின் முக்கிய நிகழ்ச்சிகளாகும். இன்றைய தேர்தலில் வெற்றிபெற்றவர்களின் நாமங்களும், பிறவும் வருமாறு :-

**1. யாழ்ப்பாணம்**
திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்,
த. கா. கட்சி 12,726
அதிகப்படி 4,409

**2. ஊர்காவற்றுறை**
திரு. அல்பிறெட் தம்பியையா,
த. கா. கட்சி 9,517
அதிகப்படி 3,868

**3. வெள்ளவத்தை-கல்கிசை**
திரு. எல். டி. எஸ். ஜயசிங்க,
ஐ. தே. கட்சி 16,388
அதிகப்படி 4,500

**4. பாணந்துறை**
திரு. டி. சி. டபிள்யு. கன்னங்கரா,
ஐ. தே. கட்சி 19,760
அதிகப்படி 3,856

**5. கல்விவா**
திரு. எஸ். எச். மகாடியுல்வீவா,
ஐ. தே. கட்சி 5,674
அதிகப்படி 1,537

**6. கம்பளை**
திரு. எம். டபிள்யு. ஆர். டி சில்வா,
ஐ. தே. கட்சி 7,950
அதிகப்படி 2,637

**7. நுவரேலி**
திரு. பி. பி. சுமணதிலக,
ஐ. தே. கட்சி 3,852
அதிகப்படி 3,003

**8. பிங்கிரியா**
திரு. டி. பி. சுபசிங்க,
ந. ல. ச. ச. கட்சி 16,426
அதிகப்படி 2,532

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் சின்னம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின்சுற்றத்தாரும், மற்ருேரும் அவர்களைப்பகைத்தனர். அவர்களுக்குப்பலவகையிலும இன்னல்கள்விளைத்தனர். ஊரவர்களின் முறையீட்டால் மரியநாயகம்ஆசிரியரும் வேருேர்பாடசாலைக்கு மாற்றப்பட்டுப் போய்விட்டார். அவர்மறைந்தாலும் அவர்கூறிய வார்த்தைகளை அவர்கள்மறவாது தேவவாக்கெனநம்பிநடந்தனர்.

அந்தநம்பிக்கைக்கு அறிகுறியாக இருந்தது அச்சுரூபம். ஆசிரியர் கொடுத்த அச்சுரூபத்தை அரியம் ஓர் அறையில்வைத்துப் பூசிக்கவில்லை. அதைத் தன்னுடனேயே வைத்திருந்தார். தான்செல்லுமிடந்தோறும் அதையும் தன் சட்டைப் பையில் வைத்தேகொண்டுபோவார். நாளொன்றுக்குப் பத்துப்பன்னிரண்டு தடவைகளாகுதல் அதைமுத்தமிடாமல் இருக்கமாட்டார்.

"சுவாமி! அவரைமனந்திருப்பிய அந்தஆசிரியருக்குமே இவ்வளவுவிசுவாசமும், நம்பிக்கையும் இருந்திருக்குமென்று நான்ஒருபோதும நமப மாட்டேன்."

"ஆம் மாஸ்றர்! தற்காலம்எவரும் அப்படிப்பட்டவரை ஒரு பைத்தியகாரன் என்று கேலிசெய்வார்கள். ஆனுல், அரியத்தின்விசுவாசம் அவரை இரட்சித்தது. அவர்மனைவி அருமைநாயகியைத்தவிர எவரேனும் துணையில்லா அவ்வூரில் அச்சுரூபம்ஒன்றே அவருக்குஉறுதுணையாகவும், நம்பிக்கையின்சின்னமாகவும், வெற்றிப்பொருளாகவும் இருந்தது."

அவர்களது நம்பிக்கையின்சின்னமாக அவர்களது தனிமையைப்போக்க ஓர்புத்திரனும் பிறந்தான். அவர்கள் வாழ்வும் சிறிதுமலர்ந்து, துன்பத்திலும் ஓர்இன்பத்தைக் கண்டனர். ஆனுல், அந்தஇன்பம்...முடியும்...

மீண்டும் அவர்களைச்சோதிக்கச் சித்தங்கொண்டார் கடவுள். புத்திரனுக்கு ஒருவயது பூர்த்தியானதும் முந்திய குழந்தைகளைப் பிடித்தநோயே இந்தப்பிள்ளையையும் பற்றிக்கொண்டது. இரண்டுமாதகாலம் படுக்கையிலேயே கிடந்தான். பெற்ருேரின்மனவருத்தம் அளவுகடந்துவிட்டது.

இதுதான் தக்கதருணம் என்று நினைத்து அங்குவந்து சேர்ந்தனர் அயலார்அனைவரும. அவர்களின் மனதை மாற்றிச் சத்தியவேதத்தை மறுதலிக்கச்செய்ய இயன்றளவு முயற்சித்தனர்.

"தம்பிஅரியம்! நீ எங்களை ஒருசொல்லுக்கேளாமல் நடந்துகொண்டதின்பலன் இதுதான்."

"இது எங்கள் காட்டேர்த் தெய்வத்தின்சாபமடா! ஏதோ அழிகட்டுச் செய்தால்தான் இந்தப்பிள்ளை தப்பும்."

"மாந்திரீகனை அழைத்துவரச் சொல்லட்டுமா?" என்று இவ்வாறு பலரும் பலவிதமாய்க் கூறியவார்த்தைகளால் மனைவிமனம் சிறிது மாறியபோதும் அரியத்தின்மனம் சற்றேனும் அசைந்துகொடுக்கவில்லை. வந்தவர்க்கு ஒருமறுமொழியும் சொல்லாது இருவரும் கற்சிலைபோல்இருந்தனர். கற்பாரின்மேல் அருவிஓடுவது போல் அவர்கள் கண்களிலிருந்து நீர்பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

அன்று மார்கழிமாதம் 24-ந் திகதி புதன்கிழமை. இரவு பத்துமணிஇருக்கும். மழை ஓய்வுஒழிவின்றிப் பெய்துகொண்டிருந்தது. திவ்வியபாலன்பிறக்கும்வேளைக்கு இன்னும் இரண்டுமணி நேரந்தான் இருந்தது. வருத்தத்தின் வேகத்தால் பாலகன்அசைவற்று அனுங்கிக்கொண்டிருந்தான். இன்னும்இரண்டுமணி நேரத்தில் உயிர்பிரிந்துவிடும்போல் தோன்றியது.

பாலனுக்கருகில் சிலைபோல் உட்கார்ந்திருந்த அரியம் திடுக்கிட்டு எழுந்தார். மேட்டுரைநோக்கி விரைவாகநடந்தார். அவர் மேட்டூர்க்கோவிலைப் போய்ச்சேரவும், அங்கே நத்தார்ச்சாமப்பூசை தொடங்கவும் சரியாகஇருந்தது. பூசைமுடிந்ததும் அவர்திவ்வியபாலனின் திருச்சந்நிதியிலே மன்ருடிக்கொண்டிருந்தார்.

"என்நேசதேவனே! நீரே தஞ்சமெனஅண்டிவந்தேன். நீரே என்மகனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கவேண்டும். இதுவரைஎனதுமகன் உயிருடன் இருப்பானு? நான் என் மகனைப் போய்ச்சந்திப்பேனு" என்று புலம்பியவாறு கவலைமீதியால் சோர்ந்து தரையில்சாய்ந்து அயர்ந்த நித்திரையானுர்.

* * *

அந்த அயர்ந்த நித்திரையிலேயே அவர் யாதோ எண்ணியவர்போல்திடீரெனஎழுந்து அங்குகோவிலில்இருந்த திவ்வியபாலனின் திருச்சுரூபத்தைக் கையில்எடுத்து "நான் உன்னைநம்பி மோசம்போனேன். என்ஆத்திரம்தீர என்னசெய்கிறேன் பார்" என்று ஆவேசத்துடன்கூறி, அதைஎறிந்து உடைக்கக் கையைஓங்குகின்ருர். அக்கணமே அவரதுஓங்கியகரத்தை ஒரு கரம்பற்றுகின்றது. அவர்முன்னுல் ஒரு குருவானவர் நின்றுகொண்டிருக்கிருர்.

"மகனே, என்னமடைத்தனமான வேலை செய்யத்துணிந்தாய்?"

சுவாமி! என்னைவிட்டுவிடும்; இனிமேல்என்னுல் பொறுக்கமுடியாது."

"மகனே நான் எல்லாம்அறிவேன்; உன்மனம் புண்பட்டிருக்கிறது. என்ருலும் இக்கொடும்செயலால் நீ தேவகோபத்துக்குள்ளாகுவாயே. எங்கும் நிறைந்துள்ள எல்லாம்வல்ல பரம்பொருளை நீ பழிவாங்கப்பார்க்கிருயே."

"சுவாமி! என்அருமைக்குழந்தைகள் மூவரைஇழந்தேன். எனதுஊரில் ஒருவர்பாக்கியின்றி எல்லாரையும்வெறுத்து இவரேதஞ்சமென நம்பியிருந்தேன். துட்டமிருகங்கள் வாழும் காட்டுக்கூடாகக் கடும்மழையில் இவ்வளவுதூரம் ஓடிவந்தேன். எனது பிள்ளை இதுவரை இறந்துவிடுவான். எனக்குஇனி என்னவாழ்வு" என்று சொல்லித் துக்கந்தாங்காது விம்மி விம்மி அழுதார்.

"மகனே! கலங்காதே. அவர்பத்திமான்களைத்தான் கடுமையாகச்சோதிப்பார். யோபுமகானைக்காட்டிலும் கூடுதலாக உன்னைச் சோதிக்கவில்லையே. ஆக்குவதும்அவரே அழிப்பதும் அவரே."

"கண்ணில்லாதவன் கண்களைப் பெற்றுத் திரும்பஇழப்பதுபோன்ற நிலைமையில் என்னைவிட்டுவிட்டாரே சுவாமி."

"ஆம், உன்அருமைக் கண்மணியின் ஆசை உனதுஅறிவுக்கண்களை மறைக்கிறது. 'நீ விசுவசித்தாயாகில் மரித்தோரினின்று உன்சகோதரனை உயிர்ப்பிப்போம்' என்று இத்திவ்வியபாலன் தானே வசனித்து, மரித்த லாசரை உயிர்ப்பிக்கவில்லையா? ஆகையால், நீ தளராதவிசுவாசமும், நம்பிக்கையுமுள்ளவனுய் இரு. உனதுமகனுக்குத் தேவன் உயிர்ப்பிச்சைகொடுப்பார்."

அதைக்கேட்டதும் ஆறுதல் அடைந்து அரியநாயகம் தமதுவீட்டிற்கு விரைந்துசென்ருர். வாசற்படியில் ஏறும்போது வீட்டிற்குள் கதைக்கும்சத்தம்கேட்டது.

"அம்மா! அம்பிபாலன்"

"இதுதான் உனக்குஉயிர்தந்த தேவபாலன்."

இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே கதவைத்திறந்து உள்ளே சென்ருர். அங்கேமகன் தாயின்மடியில்இருந்துகொண்டு திவ்வியபாலன் சுரூபத்துடன் விளையாடும் காட்சியைக் கண்டார். அரியம் இருபாலர்களையும் முத்தமிட்டுக்கொண்டே தான்நித்திரையில்கண்ட காட்சியை மனைவிக்குச் சொன்னுர்.

* * *

குருவானவர் கதையைமுடித்துக்கொண்டு என்னை நிமிர்ந்துபார்த்தார். எனது கண்களிலிருந்தும் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே "சுவாமி, அவர்கள் இப்பொழுது எங்கே இருக்கிருர்கள்" என்றேன்.

"அவர்கள் பாகதி அடைந்துவிட்டனர். மகன் குருவாகித் தந்தையின் வாக்கை நிறைவேற்றுகிருர்."

கதைசொல்லி முடியும்வரை கலங்காதிருந்த குருவானவர், இவ்வார்த்தைகளைச் சொன்னதும் துக்கம்தாங்காது மறுபக்கம்திரும்பி அழுதார். கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டே நிமிர்ந்து என்னைப்பார்த்து, ஏதோசொல்ல வாய்திறந்தவர், நான் கண்ணீர்சொரிவதைப் பார்த்துத் திடுக்கிட்டார். சிறிதுநேரம் இருவரும் பேசாதிருந்தோம். பிறகு நானுகவே "சுவாமி! நான்முன்னரே உம்மைத் தெரிந்துகொண்டேன். அரியத்திற்கும், அருமைக்கும் பிறந்ததவப்புதல்வன் நீராகத்தான் இருக்கவேண்டும்என்று அச்சுரூபத்தைப் பார்த்தபோதே ஒருவாறு புரிந்துகொண்டேன் சுவாமி!

"அப்படியானுல் நீர்..........."

"நான்தான் உமது பெற்ருேரைத் தனியேவிட்டுச் சென்ற அந்தப்பாவி மரியநாயகம். அச்சுரூபத்தின் பின்பக்கத்தில் M. M. எனும் எழுத்துக்கள் இருக்கின்றனவா பாருங்கள்."

அவ்வட்சரங்கள் அதிலிருப்பதைப் பார்த்ததும் குருவானவர், "ஐயோ மாஸ்றர்! உமதுபெயர் M. M. நாயகம்என்று இருந்ததால் நான்அதைப் புரிந்து கொள்ளவில்லையே" என்று கூறிக்கொண்டே எனது கரங்களைப் பற்றிப் பலமுறை முத்தமிட்டார்.

## உங்களுக்குத் தெரியுமா?

**1.** பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரான அர்ச். சின்னயாகப்பரைப் பற்றிச் சுருக்கமாகயாதுசொல்லலாம்?

இவர் கிளியோப்பாஸ் (அல்பியஸ்) உடையவும், மரியாளுடையவும் புதல்வர். இவர் திவ்வியகர்த்தருக்குச் சகோதர முறையானவரென்று கருதப்படுகிருர். "நீதிமான்" என்று அறியப்பெற்று ஜெருசலேமின் முதல் மேற்றிராணியாராக விளங்கியிருந்தார். இவர் யூதர்களால்முந்தமுந்தக் கல்லெறிந்தும், பின்னர் தண்டாயுதங்கொண்டு அடிக்கப்பட்டும் கி. பி. 62-ம் ஆண்டுவரையில் வேதசாட்சியாயினுர். இவர் ஒரு நிருபமும் எழுதியிருக்கின்ருர்.

**2.** இங்கிலாந்துதேச எட்டாவது ஹென்றி மன்னனுடையவும், அறகோனின் கத்தரீனுடையவும் விவாகநீக்கத்தை அனுமதிக்கமறுத்த பாப்பானவர்யார்?

ஏழாவது கிளமென்ற் பாப்பானவர்.

**3.** கருதினுல் ஒருவரின் கணையாழியில் பதிக்கப்படும் இரத்தினக்கல் எது?

நீலரத்தினக்கல்.

**4.** பதினைந்தாம் ஆசீர்வாதப்ப பாப்பானவரால் ஆக்கப்பெற்ற கருதினுல்மாருள் இன்னும் எத்தனைபேர் சீவந்தாயிருக்கின்றனர்?

ஒரேயொருவர்தான். அவர் ஜேர்மனியிலே மூனிச்நகர் அதிமேற்றிராணியாரான கருதினுல் போல்ஹாபர் ஆண்டவரே.

**5.** திருச்சிலுவையைப்பற்றிக் கூறப்படும் விருதுமொழிகள் எவை?

திருச்சிலுவை பரலோகத்தின் திறவுகோல். யேசுவின் செயக்கொடி. மானிடரின் நம்பிக்கை. திருச்சபையின் வெற்றிமுடி. கிறீஸ்தவர்களின் கேடயம். இரட்சிப்பின் அடையாளம். துயரத்தில் ஆறுதல். பிசாசுகளைப் பயமுறுத்தும் பரமஆயுதம். அதனுல் அடிக்கடி சிலுவைவரைவதும், பத்தியோடு அதைவரைவதும், ஆசிநீர்தொட்டு அதைவரைவதும் மிகப்பலனுள்ளதாகும். பக்தியோடுபலமுறை சிலுவைவரைந்ததால் அர்ச். எலேன் இராக்கினியின் பெருவிரல் இன்னும் அழியாமல் இருந்துவருகிறது.

**6.** "உன்னையன்றி உன்னைப்படைத்த கடவுள் உன்னையன்றி உன்னை இரட்சிக்கமாட்டார்" எனும் பொன்மொழியைக் கூறியவர் யார்?

பேர்பெற்ற வேதபாரகரான அர்ச். அகுஸ்தீனுர்.

**7.** குருமார்மட்டில் நமக்குள்ள மதிப்புப்போனுல் என்னநிகழும்?

குருமார்மட்டில் நமக்குள்ள மதிப்புப்போனுல் குருபக்திபோம். குருபக்திபோனுல் விசுவாசம்போம். விசுவாசம்போனுல் சகலநன்மைக்கும் மூலகாரணமாகிய தெய்வபயம்போம். தெய்வபயம்போனுல் நல்லொழுக்கம் போம். நல்லொழுக்கம்போனுல் இம்மையிலும், மறுமையிலும் நாம் ஆசித்துத்தேடும் நன்மைகள் யாவும் பஞ்சாய்ப்பறந்துபோம். இவைகளையெல்லாம் வேதவிரோதிகளும், கம்யூனிஸ்தர்களும் நன்ருயறிவார்கள். அதனுற்தான் கிறீஸ்தவர்களின் மத்தியிலே குருமாருக்குள்ள நன்மதிப்பைக்கெடுப்பதில் அவர்கள் கருத்தாயிருக்கிருர்கள்.

**8.** நாஸ்திக பொதுவுடைமைக் கொள்கை எவ்வாறு தலைகாட்டியது?

ஆங்காங்கு பலநாடுகளிலும் பயங்கர புரட்சிகளைத் தூண்டிநடத்தி உலகத்தைச் சீர்குலைத்து அடிமைப்படுத்துமாறு யூதர்களில் மிகச்சொற்பபேரான ஓர் இரகசியகூட்டத்தார் அந்தரங்கமாகச் சதியாலோசனைசெய்து யூகித்து அமைத்த அந்தகாரசூழ்ச்சியே நாஸ்திகபொதுவுடைமைக் கொள்கையாகும். இதன்மூலபிதா காள் மாக்ஸ் எனும் ஓர்யூதனே. எண்ணிறந்தமக்களின் குருதியைச்சிந்தச்செய்து, ருஷியாவை இரத்தகளமாகச்செய்து இப்பாதககொள்கையை அங்குஇயக்கி வைத்த லெனினும் ஓர் யூதனேயாம். "கடவுளை என் சென்மசத்துருவாகப் பகைக்கிறேன்" என்ருன் நாஸ்திகனுன இந்தலெனின். பாதகவேலைகளில் இவனுக்கு முக்கியசகாக்களாய் இருந்தவர்கள் பெரும்பாலும் யூதர்களே.

## நாளுசங்கதிகள்

— தற்போது இந்தியாவே உலகின் மற்றெந்தத் தேசத்தைக் காட்டிலும் மோட்டார் ரதப்பிரயாணத்தில் அதிகமானநாட்டமுடையதாய்க் காணப்படுகிறதென்றும், இன்னும்பத்துவருடகாலத்திலே இந்தியா கீழ்தேசங்களில் மோட்டார்ரதங்களால் மிகுந்தநாடாகுமென்றும் தென்னிந்திய மோட்டார் ரதகாரர்சங்கத்தின் தலைவரான திரு. ஏ. ஏ. ஹெயில்ஸ்கூறுகின்ருர்.

— கம்யூனிஸ்தசீனுவிலுள்ளபிரித்தானிய பெரியவர்த்தக சமுதாயங்களெல்லாம் அங்கிருந்து வெளியேறிவிடக் கருத்துக்கொண்டிருப்பதாகப் பிரித்தானியஅரசாங்கம் கம்யூனிஸ்தசீன அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கின்றது. அங்ஙனம் வெளியேறுவதாலே அவைகள் அங்குவிட்டிருக்கும் 30 கோடிக்குமேற்பட்ட முதலீடுகளும் வெளியேறுவனவாகும்.

—போர்த்துக்கால்தேச ஒபோட்டோநகரையடுத்த விலா-காயிஸ்எனும் கிராமத்திலே டெக்செய்ரு என்ற சப்பாத்துக்கட்டியின் மனைவியான காந்திதா டெக்செய்ரு எனும்பெண் சமீபத்திலே தனது ஒற்றைப்பிரசவத்தில் மூன்றுகுழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கின்ருள். இதற்கு முந்திய நான்குபிரசவங்களிலே இவள் ஒவ்வோர் பிரசவத்திலும் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அதாவது ஆறுவருடத்தில் இவள் பதினெருபிள்ளைகளைப் பெற்றிருக்கின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்புச் சோதரங்களே!

உங்கள் வீட்டு நடுச்சாலையின் நடுவில் தொங்கிக்கொண்டிருக்கிறதே ஒருபடம். அது யாருடையது? யாரைக் குறிக்கிறது? அது திருஇருதய ஆண்டவருடைய படம். யேசுநாதர் தமது இருதயத்தை எங்களுக்குக் காட்டும் பாவனையாய் அச்சித்திரம் தீட்டப்பட்டிருக்கிறது. அதை வீட்டின் நடுஇடத்தில் மாட்டியிருப்பது ஏன்? யேசுக்கிறீஸ்துநாதர் உங்கள் குடும்பத்தின் அரசர். வீட்டிலுள்ளவர்கள் இந்தத் தேவஇராசாவுக்குச் சேர்ந்தவர்கள், அவருடைய பிரமாணிக்கம் நிறைந்த பிரசைகள் என்பதை நினைவூட்டும்படி திருஇருதய ஆண்டவருடைய படத்தை வீட்டில் பிரதான இடத்தில் வைத்திருக்கிறீர்கள்.

திரு இருதய ஆண்டவர் உங்களிடம் என்ன கேட்கிறார்? தம்முடைய எல்லையற்ற நேசத்திற்கு—சுவாலித்து எரியும் இணையற்ற அன்பிற்குப் பதில்நேசம் காட்டும்படி கேட்கிறார். தம்மை அறியாதவர்களும் நேசியாதவர்களும் தம்மை மறந்து, செய்கிற நிந்தைகளுக்கு ஓர் பரிகரிப்புச் செய்யும்படி கேட்கிறார்.

இந்த ஆனிமாதம் திரு இருதய வணக்கமாதம். ஆகையால், சகோதரரே திரு இருதய நாதருக்கு உங்கள் இருதயப்பூர்வமான நேசத்தைக் காட்டுங்கள். உங்கள் ஞானக் கடமைகளையும், படிப்புகள், விளையாட்டுகளையும் அவருக்கு நேசங்காட்டும் எண்ணத்துடன் நிறைவேற்றி வாருங்கள்.

உங்கள் அன்புள்ள
அண்ணா

## நீங்கள்.........?

பிலிப்புநாயகம் இந்த மாசத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திவ்விய பூசை கண்டு தேவ நற்கருணை உட்கொண்டு தன் பாவங்களுக்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுப்பான். நீங்கள்....?

மரியநேசன் தன்வீட்டிலுள்ளவர்களுடன் சேர்ந்து செபமாலையும், திருஇருதயப் பிரார்த்தனையும் சொல்லி இந்த வணக்கமாசப்பத்தியைத் தன் தகப்பன் கட்டிக்கொள்ளும் குடிவெறிப் பாவத்திற்குப் பரிகாரஞ் செய்வான். நீங்கள்........?

மரியமுத்து நாள்தோறும் அதிகாலையில் பூசைகண்டு தானும், தன் உடன்மாணவிகளும் தேவநேசத்தில் வளரவேண்டுமென்னும் கருத்துடன் இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பாள். நீங்கள்.......?

## தாய் சொல்லைத் தட்டாதே

அன்று டேசியின் தாயார் அயல்வீட்டு அம்மாளுடன் ஏதோபேசிக்கொண்டிருந்தாள். பெண்கள் பேச்சென்றால் கேட்கவும் வேண்டுமா? நேரம் போவது தெரியாமல் நல்லதோ, தீயதோ பேசிக்கொண்டே இருப்பார்கள். தன் தாயாருக்குத் தன்னால் இயன்ற உதவிகள் செய்யவேண்டுமென்று டேசிக்கு ஒரே ஆசை. அன்றும் அவள் அவ்வாறே உதவிசெய்ய எண்ணினாள். பாத்திரங்களைக் கழுவி வைக்கலாம் என்ற நோக்கத்துடன் அடுக்களைக்குச சென்றாள். அங்கே அவைகள் சுத்தம் செய்யப்பட்டிருந்தன. துடைப்பத்தை எடுத்துக்கொண்டு படுக்கை அறைக்குச் சென்றாள் அதுவும் சுத்தம் செய்யப் பட்டிருந்தது. சுருங்கச் சொன்னால், எல்லா வேலைகளையும் அவள் தாய் செய்து முடித்துவிட்டாள்.

சலிப்புற்ற டேசி பூந்தோட்டத்தை நாடினாள். அங்குள்ள மலர்ச்செடிகள் அவளைத் தங்கள் மலர்முகங்களால் வரவேற்றுத் தங்கள் தாகத்தைத் தெரிவித்தன. அம்மலர்ச் செடிகளுக்கு டேசியும் தாயுமே தினமும் தண்ணீர் வார்ப்பார்கள். ஆனால், டேசியைத் தாய் கிணற்றிற் தண்ணீர் எடுக்க விடுவதில்லை.

இன்று அவள் தனியாக வந்திருந்தாள். செடிகளின் வாட்டத்தை அவளாற் பொறுக்க முடியவில்லை. தாயின் கட்டளையையும் மறந்து, தனது சிறிய பூவாளியுடன் கிணற்றண்டை விரைந்தாள். கிணற்றைக் கிட்டியதும் தாயின் கட்டளை ஞாபகத்திற்கு மீண்டது. ஆனால், அவள் “இப்போது நான் குறும்பு செய்யவில்லையே; என் அம்மாவிற்கு உதவியல்லவா செய்கிறேன்; அம்மாவின் நன்மைக்காக அவவின் கட்டளையை மீறினால் என்ன? இதில் என்ன பிழை இருக்கிறது? இதற்கு ஆண்டவர்கூட ஒருபோதும் கோபிக்க மாட்டார்.” என்று எண்ணியபடி மனத்துணிவுடன் மலர்களுக்குத் தண்ணீர் வார்த்தாள். “வார்த்து முடிந்ததும் அம்மா வந்தால் எவ்வளவு ஆனந்தம் கொள்வாள்” என்று எண்ணியபோது அவள் மனம் பூரிப்பு அடைந்தது.

ஒரேஒரு றோசாச் செடிதான் தண்ணீர்வார்க்கப்படாமல் நின்றது. ஆனந்தம்கொண்ட டேசி ஆடிக்கொண்டே கிணற்றண்டை சென்றாள். படியில் அவள் வைத்த கால் தவறிவிட்டது. அவ்வளவுதான் “அம்மா!....” என்ற ஓசையைத் தவிர அங்கு டேசியைக் காணவில்லை.

பிள்ளைகளே! பார்த்தீர்களா? தாய்சொல்லைத் தட்டியதால் வந்த கெடுதியை? தாய் தனது நன்மைக்காகவே கட்டளை இட்டிருக்கிறாள் என்பதை டேசி உணரவில்லை. நீங்களும் உங்கள் பெற்றாரின் கட்டளைகளை மீறினால் இக்கெதிதான் நேரும்.

டேசி கண் விழித்தபோது தான் படுக்கையில் இருப்பதையும், டக்றர் தன்னைப் பரிசோதனை செய்வதையும், அப்பாவும் அம்மாவும் சோகமாகத் தன் அருகில் உட்கார்ந்திருப்பதையும் கண்டு ஒருவாறு நடந்ததை ஊகித்துக் கொண்டாள். மீண்டும் கண்களை மூடினாள். யாரோ தனது காதிற்குள் “தாய்சொல்லைத் தட்டாதே, தாய்சொல்லைத் தட்டாதே” என்று கூறுவதுபோல் இருந்தது. அவள் மனம் குமுறியது.

கட்டிலைவிட்டு ஆவேசம் கொண்டவளைப்போல் எழுந்தாள். தாயின் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ‘அம்மா! நீங்கள் என்னுடைய நன்மைக்காகத்தான் கட்டளையிட்டீர்கள்; நான் அதை அறியாது உங்கள் கட்டளையை மீறிவிட்டேன்; இனி ஒருபோதும் உங்கள் கட்டளையையோ, அப்பாவின் கட்டளையையோ, அல்லது எந்தப் பெரியோரது வார்த்தையையோ மீறமாட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்” என்றாள். தாய் ஆனந்தப் பெருக்கால் அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

—கரம்

# தியாகவீரர் தமியான்சுவாமிகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உணவு, உடை, சுத்தசலம், பராமரிப்பு இன்றி மொலோக்காய் தீவில் வருந்தினர் குஷ்டரோகிகள். சாண்ட்விச் தீவில் உட்பட்ட மோவி தீவில் புதிதாகக்கட்டப்பட்ட ஓர் தேவாலயத் திறப்புச்சடங்கை நிறைவேற்றுவதற்காக மெகுரற்று ஆண்டகையும் குருப்பிரசாதிகளும் சென்றிருந்தனர். அவ்வமயம் நிகழ்த்திய பிரசங்கத்தில், ஆண்டகையவர்கள் மொலோக்காயில் குஷ்டரோகிகள் படும் அவஸ்தையை எடுத்துரைத்தார். தமியான் சுவாமியார் இதுசெவியுற்று மனமுருகித் தம்மை அத்தீவிற்கு அனுப்புமாறு ஆண்டகையை வேண்ட, அவரும் அளவிலா மகிழ்ச்சியுடன் உத்தரவளித்தார்.

சுவாமியாரும் மொலோக்காய் தீவை அடைந்தார். அவ்வமயம் அவருக்கு வயது 33. தீவு பூராவாகச் சுற்றித்திரிந்து குஷ்டரோகிகளின் கஷ்டங்களையறிந்தார். அரசாங்க ஆதரவுடன் ஓர் மலைச்சுனையிலிருந்து குழாய்கள்மூலம் சுத்தசலம் தருவித்தார். திறந்த ஆகாயவெளியில் மழையிலும் வெயிலிலும் கஷ்டமடைந்த மக்களுக்குப் பல சிறியவீடுகளைக் கட்டிக்கொடுத்தார். துர்க்கந்தம்வீசிய புண்களைக் கழுவி மருந்திட்டார். ஆத்தும அந்தகாரம் நீக்கத் திவ்விய பூசை, அனுமானங்களைக் குறைவின்றி நிறைவேற்றினார். இறந்தோரை நல்லடக்கம் செய்யத் தாமே சவப்பெட்டி, குழிகள் தயார் செய்தார். அவர் ஓய்வின்றிச் செயலாற்றினார்.

மொலோக்காயிலே அவர் சேர்ந்த 10-ம் வருடம் அது. சுகதேகியாய்க் காணப்பட்டார். ஆனால், ஒருதினம் ஓர் வெந்நீர்ப்பானை உடைந்து அவர் பாதத்தில் சிந்தியது. கொதி வெந்நீர் பாதத்தில் கவிழ்ந்தும் அவருக்கு வலிஎன்பதே ஏற்படவில்லை....ஆம்....உணர்ந்தார்..... தமக்குக் குஷ்டரோகம் கண்டிருப்பதை அவ்வமயம்தான் அறிந்தார். அளவிலா ஆனந்தமுடன் அது தமக்குக் கிடைத்த பாக்கியமென அறைந்தார். பிணி வளர்ந்தது. அவர் திவ்வியபலி நிறைவேற்றிய விரல்களில் வியாதி பரவவில்லை. ஆகவே, அவர் பூசை நிறைவேற்றி முன்போலச் சேவைசெய்தார்.

தன் தனயன் குஷ்டரோகியான செய்தி பத்திரிகைமூலம் அறிந்த அவர்தாயார் தன்மகனின் படத்தைப்பார்த்து “நாம் இருவரும் ஒன்றாகப் பரலோகம் போகலாம்” என உரைத்தனள். இதற்கடுத்த தினம் அப்பாக்கியவதி இறந்தனள். 16 வருடசேவைக்குப்பின் 1889-ம் ஆண்டு சித்திரை மாதம் 15-ம் நாள் தமது 49-வது வயதில் தமியான் சுவாமியாரின் ஆத்துமா சரீரச்சிறையிலிருந்து விடுதலையடைந்தது. அதற்குமுன் தம்மைச் சூழ்ந்து நின்றோரிடம் தமது குஷ்டரோக நண்பர்களைக் கவனிக்குமாறு வேண்டினர்.

அவர் இறந்த சிறிது காலத்திற்குப்பின் அவரது சரீரத்தின் பாகங்கள் “றிபப்ளிக்” என்ற அமெரிக்க கப்பலில் அரசமரியாதையுடன் பெல்ஜியத்துக்கு அனுப்பப்பட்டது. அங்கும் அரசமரியாதையுடன் அது வரவேற்கப்பட்டது. இங்கிலாந்திலே எட்டாவது எட்வாட்மன்னர் தலைமையில் நடந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானப்படி, மொலோக்காயில் தமியான் சுவாமியாரின் நினைவுச்சின்னம் நிறுவப்பட்டு, அதிலே “ஒருவன் தன் சிநேகிதனுக்காய் உயிரைத் தியாகம் செய்வதிலும் மேலான சிநேகம் இல்லை” என்ற கர்த்தரின் பொன்மொழி பொறிக்கப்பட்டது.

பொதுவுடைமை நாடுகள் நஞ்சிட்டுக்கொல்லுகின்றன குஷ்டரோகிகளை. நமது திருமறை அவர்களை ஆதரித்துக் காப்பாற்றுகிறது ....இதுதான் ........ இரண்டிற்குமுள்ள வேற்றுமை! “பிறர்சிநேக தத்துவம் என்ன என்று தமது வாழ்வின் மூலம் எண்பித்த தமியான்சுவாமிகளின் வாழ்க்கை இதை நன்கு தெளிவுபடுத்துகின்றது.

## நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்ததேவமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார், சங். அல்போன்சா கன்னிகாஸ்திரி இவர்களது மன்றாட்டால் எங்கள் குடும்பங்களிலிருந்தபகை நீங்கியது. இன்னும் தகப்பனாருக்கு ஏற்பட்ட வயிற்றுநோய், கண்நோய்களும் நீங்கின. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். இன்னும் வேண்டும் வரங்களும் கிடைக்குமென்று நம்புகிறேன்.

கரம்பொன். மிஸிஸ் E. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தல் முடிவுகள்

( 5-ம் பக்கத் தொடர்ச்சி )

### 9. மஸ்கேலியா
திரு. பி. எச். சி. சில்வா,
ஐ. தே. கட்சி 3,415
அதிகப்படி 2,459

### 10. நாவலப்பிட்டி
திரு. ஆர். ஜயதிலக,
தொ. கட்சி 4,955
அதிகப்படி 3,990

### 11. கேகாலை
திரு. என். எச். கீர்த்திரத்ன,
ஐ. தே. கட்சி 16,443
அதிகப்படி 7,471

### 12. உடுகமம்
திரு. டபிள்யு. என். டி. அல்வீஸ்,
ந. ல. ச. ச. கட்சி 11,181
அதிகப்படி 2,735

### 13. மாத்துறட்டை
திரு. எம். டி. பண்டா,
ஐ. தே. கட்சி 15,333
அதிகப்படி 14,211

### 14. வடடேகமம்
திரு. ஹென்றி அபெயவிக்ரம,
ஸ்ரீல. சு. கட்சி 15,304
அதிகப்படி 3,932

### 15. தம்பனை
திரு. எச். பி. தன்னே,
ஸ்ரீல. சு. கட்சி 8,294
அதிகப்படி 4,852

### 16. அமுத்துநுவரை
திரு. ஜே. ஏ. றம்புக்பொத்த,
ஐ. தே. கட்சி 3,593
அதிகப்படி 2,678

### 17. பத்தனை
திரு. டபிள்யு. லீயோ பெர்னுண்டோ,
ஐ. தே. கட்சி 8,396
அதிகப்படி 7,024

### 18. மத்துகமம்
திரு. வில்மட் ஏ. பெறேரு,
குடி. கட்சி 18,168
அதிகப்படி 2,504

### 19. மொறட்டுவா
திரு. சோமவீர சந்திரசிறி,
ந. ல. ச. ச. கட்சி 16,125
அதிகப்படி 3,384

### 20. தண்டகமுவா
திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல,
சுயேச்சை 16,581
அதிகப்படி 11,742

### 21. சிலாபம்
திரு. எஸ். சி. ஷேர்லி கோறியா,
ஐ. தே. கட்சி 10,260
அதிகப்படி 54

## 30—5—52—வெள்ளி

இன்றையதேர்தலிலே கம்யூனிஸ்த கட்சியின் பொதுக்காரியதரிசியான டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டமை விசேஷசம்பவமாகும். கடைசியாக நடைபெற்ற இத்தேர்தலுடன் பாராளுமன்றத்திலே ஐக்கியதேசியகட்சி பூரணபெரும்பான்மைப்பலத்தை ஈட்டிக்கொண்டது. இன்று வெற்றிபெற்ற அபேட்சகர்களின் நாமங்களும் பிறவும் வருமாறு :

### 1. காங்கேசன்துறை
திரு. எஸ். நடேசன்,
ஐ. தே. கட்சி 15,337
அதிகப்படி 3,766

### 2. வட்டுக்கோட்டை
திரு. வி. வீரசிங்கம்,
சுயேச்சை 5,687
அதிகப்படி 426

### 3. கோப்பாய்
திரு. சி. வன்னியசிங்கம்,
தமிழ்அரசுக்கட்சி 9,410
அதிகப்படி 210

### 4. வவுனியா
திரு. சி. சுந்தரலிங்கம்,
சுயேச்சை 6,019
அதிகப்படி 4,522

### 5. களனி
திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன,
ஐ. தே. கட்சி 22,103
அதிகப்படி 6,235

### 6. அத்தனகலை
திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக,
ஸ்ரீல. சு. கட்சி 38,478
அதிகப்படி 32,544

### 7. கோட்டே
திரு. டி. பி. ஆர். குணவர்ததன,
ந. ல. ச. ச. கட்சி 15,865
அதிகப்படி 4,814

### 8. காலி
திரு. டபிள்யு. தகனுயக,
ந. ல. ச. ச. கட்சி 17,897
அதிகப்படி 5,021

### 9. அவிசாவலை
ஸ்ரீமதி குஸுமா குணவர்த்தன,
ச. ச. கட்சி 19,414
அதிகப்படி 929

### 10. மிரிகமம்
திரு. ஜே. ஈ. அமரதுங்க,
ஐ. தே. கட்சி 27,447
அதிகப்படி 9,945

### 11. பெலியத்தை
திரு. டி. ஏ. ராசபக்ஷ,
ஸ்ரீல. சு. கட்சி 17,382
அதிகப்படி 3,632

### 12. ருவான்வலை
டக்றர் என். எம். பெறேரு.
ந. ல. ச. ச. கட்சி 10,601
அதிகப்படி 1,043

### 13. கிரியெல்லை
திரு. ஏ. ஈ. பி. கிரியெல்லை,
ஐ. தே. கட்சி 9,978
அதிகப்படி 2,609

### 14. குருநாகல்
திரு. டி. பி. வெலகெதர,
ஐ. தே. கட்சி 18,049
அதிகப்படி 4,531

### 15. அக்குறேசை
ஸ்ரீமதி டொறீன் விக்கிரமசிங்க,
கம். கட்சி. 16,626
அதிகப்படி 1,001

### 16. இரத்தினபுரி
திரு. சிறில் அற்றிக்கலை,
ஐ. தே. கட்சி 11,191
அதிகப்படி 1,811

### 17. வதுளை
இருபிரதிநிதிகள்

திரு. ஜே. சி. டி. கொத்தலாவல,
ந. ல. ச. ச. கட்சி 12,450
திரு. எஸ். ஏ. பீரிஸ்,
ஐ. தே கட்சி 12,047
1-வது அதிகப்படி 403
2-வது அதிகப்படி 5,486

### 18. அம்பலாங்கொடை – பலப்பிட்டி
இருபிரதிநிதிகள்

திரு. ஐவன் டி. சொய்சா,
ஐ. தே. கட்சி 37,901
திரு. பி. எச். டபிள்யு. டி சில்வா,
ல. ச. ச. கட்சி 33,803
1-வது அதிகப்படி 4,098
2-வது அதிகப்படி 15,146

### 19. தெகியோவித்தை
திரு. எட்மண்ட சமரக்கொடி,
ந. ல. ச. ச. கட்சி 8,848
அதிகப்படி 82

### 20. அம்பாந்தோட்டை
திரு. சாள்ஸ் எதிரிசூரிய,
ஐ. தே. கட்சி 14,294
அதிகப்படி 3,636

### 21. ஹக்மனை
திரு. சி. ஏ. தர்மபாலா,
ஐ. தே. கட்சி 15,762
அதிகப்படி 3,161

### 22. மாத்தறை
திரு. மகாராம சமரவீர,
கம். கட்சி 11,861
அதிகப்படி 1,076

### 23. கொழும்பு வடக்கு
திரு. சிறில் ஈ. எவ். பெறேரு,
ஐ. தே. கட்சி 10,690
அதிகப்படி 3,494

### 24. வெலிமடை
திரு. எம். பி. பம்பரபானே,
சுயேச்சை 6,314
அதிகப்படி 1,196

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண முதற்தேவநற்கருணை ஆதாய நிதிச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 8-6-52 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் பாடசாலை மண்டபத்தில் வண. பி. ரி. ஜேம்ஸ், ஓ. எம். ஐ. கட்டளைச் சுவாமியார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அங்கத்தவர் அபிமானிகள் யாவரும் சமுகமளிக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

S. மரியாம்பிள்ளை .
(கௌரவ காரியதரிசி)

## தேக வியோகம்

புங்குடுதீவு, அர்ச். சவேரியார் கோவிலைச்சேர்ந்த கி. மேரி யோசேப்பின்என்பவ மூன்றுமாதகாலம் நோய் வாய்ப்பட்டிருந்து அந்திய தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்று 31-5-52 சனிக்கிழமைமாலை தனது கணவர், புத்திரர், பிதாமாதா, சகோதரர், இனசனர்சூழ்ந்திருக்க, யேசுவே எனஉச்சரித்து இறைவன்திருக்கரங்களில் தனதுஆத்துமத்தைக்கையளித்து மரணமாயினு. அடுத்தநாள் சாயந்தரம் இவசேர்ந்திருந்த பத்திச் சபைப்பெண்களும், மற்றும்ஆடவர்களும் இருநிரையாய் மெழுகுவர்த்தி ஏந்திச்செல்ல, வண. யோண் மேரி சுவாமியவர்கள் பாடகர்குழாம் துணை புரியத் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவனின்பிரிவாற்றுது வருந்துவாருடன் நானும்அனுதாபப் படுகின்றேன்.

R. I. P. — நிருபர்

## மகனைக்கொன்ற தகப்பன்

தன்மனைவியான ஜெபின் நோனுவிடம் 8 சதத்தைக்கொடுத்து இதற்கு வெற்றிலையும், மண்ணெண்ணெயும் வாங்கிவாஎன்றுசொல்லி அவளைக் கடைக்குஅனுப்பிவிட்டான் ஓர்பஸ் கண்டக்றரான கே, ஏ. ஹென்றிக் அப்புகாமிஎன்பவன். அவள் வீட்டிலிருந்து கடைக்குச்சென்றபோது ஒன்றரைவயதுள்ள அவர்களின் ஆண் குழந்தை உயிரோடிருந்தது. திரும்ப அவள்வீடுவந்து சேர்ந்தபோது அப்பாலகன் உயிரற்றிருக்கக்கண்டாள். தனது மகனை மிதித்துக்கொன்றுனெனக் குற்றஞ்சாட்டி அவள்கணவன் மீது கொழும்புச்சுப்பிறீங்கோட்டிலே தொடரப்பெற்றிருந்தவழக்கு சென்றவாரம் விசாரணைக்குள்ளாய் எதிரி கொலைக்குற்றவாளியாகி மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றுன்.

* * *

—சர்வதேச சற்பிரசாத மகாநாட்டைமுன்னிட்டுப் பார்சலோனுநகரிலே பலவித திருத்தங்களும் செய்வதற்கென ஸ்பானியஅரசாங்கம் 25 லட்சம் பவுண் அனுமதித்திருந்தது. வீதிகளைப் பழுதுபார்க்கவும், றெயில்வேயிலே திருத்தஞ்செய்யவும், மற்றும் போக்குவரத்துச் சேவைகளுக்கும், அந்நகர்அதிகாரிகள் மற்றும் மகாநாட்டுச்செலவுகளைச்சரிப்படுத்தவுமாக இத்தப்பணம் அனுமதிக்கப்படலாயிற்று.


## FOR SALE

English Piano completely overhauled by Caves—Rs.1500/- for quick sale—Owner leaving Jaffna.

MISS G. A. BENJAMIN,
203/4 Off Hospital Road,
Jaffna.


## THE JAFFNA DIOCESAN UNION

An Executive Committee Meeting of the Jaffna Diocesan Union will be held at the Catholic Club on Sunday the 15th instant at 10 a. m.

**AGENDA**

1. Election of the Managing Committee of the Jaffna Diocesan Provident Society Limited.
2. Election of the (a) Literature Committee and (b) representatives for the Catholic Union of Ceylon, Central Council.

**A. Lazarus,**
*Hony. Secretary.*

Jaffna Catholic Club,
Main Street, Jaffna,
1st June, 1952.

## யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்க காரியஅங்கத்தவர்களின் கூட்டம் நிகழும் ஆனிமாதம் 15-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

1. யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப ஐக்கியசங்க காரியஅங்கத்தவர்களின் தெரிவு
2. (a) இலக்கியசங்கத்தெரிவு
   (b) இலங்கைக் கத்தோலிக்க ஐக்கிய சங்க மத்தியசங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவு

A. Lazarus.
கௌரவகாரியதரிசி

## நேர்த்தியின் பூர்த்தி

கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரிடம் நான் ஆசித்துக்கேட்ட நன்மையானகாரியம் எதிர்பாராதவிதமாக அனுகூலமானபடியால் நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

Press Road,
Jaffna. S. F.

## CEYLON GOVERNMENT RAILWAY

### Level Crossing Repairs

The following Level Crossings will be closed to vehicular traffic during the periods stated below for effecting repairs :—

**(1) The level Crossing at 63 miles 65 chains 12 links (Railway mileage) on the Colombo-Ratnapura road between Ratnapura and Triwanaketiya Stations.**

Totally closed from 10.0 p. m. on Friday, 13-6-52 to 5.0 a. m. on Saturday, 14-6-22.

The traffic to and from Rest House and Inner Circular Road can be diverted through level crossing at 64 miles 14 chains (Kudugalwatta Level Crossing.)

**(2) The Level Crossing at 80 miles 39 chains (Railway mileage) on the Galle-Matara Road between Talpe and Ahangama Stations.**

Totally closed from 8.0 p. m. on Tuesday, 17-6-52 to 4.0 a. m. on Wednesday, 18-6-52.

Traffic from Galle could be diverted through Pitiduwa Road at 79 miles 65 chains. (P. W. D. Road mileage) and traffic from Matara *via* Kataluwa Road at 82 miles 70 chains (P. W. D. Road mileage.)

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 5-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org